விசேஷ
விளம்பரத்திற்கு!

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

வி
விளம்ப

விரோத வருஷம் (1889) ஆவ
28ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ௫௩] யாழ்ப்பாணம்:— விஷ ௵ ஆனி ௴ ௧௭ ௳ (1941 ஜூன் 30 திங்கட்கிழமை) [இலக்கம் ௨௫]

# மாணிக்கவாசகம்

(ஆசிரியர் வீ. கந்தையா சிவாகந்த வித்தியாலயம் கல்லடி உப்போடை)—

"சித்திரைச் சதயமப்பர் சிறந்த
வைகாசி மூலம்
அத்தரைப் பணி சம்பந்தர் ஆனி மா
மகத்தில் அத்த
முத்தமிழ் வாதவூரர் முநிய கல்லாடி
தன்னிற்
சுத்தமாஞ் சோதி நாளிற் சுந்தரர்
கைலை சேர்ந்தார்."

ஆனிமகம் திருவாதவூரடிகள் சிவஜோதியுடன் இரண்டறக் கலந்த நன்னாளாகும். அன்றைக்கு மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை சைவசமயிகளால் இயற்றப்படும். அத்தினம் சென்ற 29. 6. 41. ஞாயிற்றுக்கிழமை யன்று கொண்டாடப் பட்டதை யாவருமறிந்திருப்பார்கள். மாணிக்கவாசக சுவாமிகளுக்குப் பூசனையியற்றி வழிபட்டிருக்கும் நாங்கள், அவர்தஞ் சரிதத்துள்ள சில விசேட நிகழ்ச்சிகளையும்; அவரால் அருளப்பட்ட மணிவாசகங்களையும் ஒருமுறை நோக்கவேண்டுவது இன்றியமையாதொன்றாகலானும்; "உலகுயிர் சித்தலகாம் உள்ளத்தவிசில் உறையும் பெரியனிறை" ஆகலானும், இவை எழுதுவதற்கு என் உளம் சென்றது.

அக்காலத்தே தமிழ் வளர்த்த மாறனாடு; ஈழம், சாவகம் (ஜாவா), யவனம், சோனகம் முதல் பன்னாடுகளுடனும் நடத்திய கப்பல் வியாபாரத்தில் பிரபல்யமுற்று விளங்கிற்று. அராபியாவிலிருந்து குதிரைக் கூட்டங்கள் கப்பல் கப்பலாகச் சேழ்க் கடற்றுறையில் வந்திறங்குவதைக் கேள்வியுற்ற அரசன் அரிமர்த்தன பாண்டியன்; தன் முதல்மந்திரியாகிய தென்னவன் பிரமராயரிடம் 'கனமிலா செறிவந்த பொன்னெழு கோடி வணக்கி' "நமக்குப்போதிய அளவு நல்ல குதிரைகளாக வாங்கி வம்மின்" என்றான். தன்னுத்தியோகத்தில் பற்றின்றி; கள்ளக்காதலி யிடத்தன்பு கொண்டார் போல, சிவனிடத்தே பற்றுக் கொடுக்கப்பட்ட மனத்தராய் நாடோறும் ஆலயம் சென்று வழிபட்டு வருவர் பிரமராயர். அவர் முதலில் ஆலவாயண்ணலை இறைஞ்சி 'ஐயனே! என்னுயிர் நின்னிடத்தும் உடல் அஞ்சற்பெருதி வீழும் உடையேன். என்னை ஆட்கொண்டருளல் நின்கடன்'' என்றேத்திப் போற்றிச் சிவிகை யூர்ந்து புறப்பட்டார் திருப்பெருந் துறையை நோக்கி.

தேமா, பலா, வாழைகளும் செந்நெல் வயல்களும் செறிந்தது அப்பதி பெருவளை பொலிவித்தது; பசுங் குடை நிழல் பரப்பி நின்றிலங்கிய அந்தப்பெரிய குருந்தமரத்தின் பங்கர் வீசிய தென்றல் வாதவூரரை வரவேற்றது. அவர் இறைவனால் ஆட்கொள்ளப்படப் போவதை அறிவிக்கும் மங்கலவொலியாயின, வரிவண்டும் புட்குலமும் ஆர்த்த ஒதை. சரியை, கிரியை, யோக ஞானமுந் தேர்ந்த சிவனடியார் கூட்டமொன்றிற்குத் தலைவராய் அம்மரத்தின் கீழ் வீற்றிருந்த அருள் வள்ளலாரைக் கண்ணுற்ற பிரமராயர் காந்தத்தினை விழுப்புண்ட இரும்பே போல உணர்வைப் பறிகொடுத்து நின்று தவித்தார். அன்னார் திருவடிகளில் வீழ்ந்து சிக்கெனப்பிடித்தார். "அப்பனே! நின்னடிமை கொள்ளவே இங்கணைந்தோம், நீ கவலற்க" என்று அச்சிவவேடத்தர் கூறித் தமது திருக்கர மொன்றினை வாதவூரர்தஞ் சிரமீசை வைத்து ஞானநல்கி; சிவதத்துவத்தை உபதேசித்தருளினர். அளவிலாப் பேரானந்தத்துண் மூழ்கிய மந்திரியார்;

"இந்திரத்தரு வெண்மனத் துள்ளே
யெழுகின்ற சோதியே! விமையோர்
சிரத்தனிற் பொலியுங் கமலச்சேவடியாய்!
திருப் பெருந் துறையுறை சிவனே!
நீர்த்த வாகாய நீர் நிலம் தீதாய்
ஆயவை யல்லையா யாங்கே
கரந்தோ குருவே! களித்தனனுன்னைக்
கண்ணுறக் கண்டு கொண்டின்றே."
—கோயிற்றிருப்பதிகம். அ

என்று போற்றிப் பணிந்தார்.

"பேரன்பனே! நித்திக்கும் மணிவாக்கால் தமிழ்மறை பாடுஞ் சிவானந்தக் குயிலாகச் சின்னாள் நிலவுக, மணித்தமிழ் மறையோய்! நீ மாணிக்க வாசகன் என்னும் பெயரால் இசை பெற்றொளிர்க; அவனிமாந்தர்க்கு அன்பமுதூட்டுக; நின்பொருளை யெல்லாம் சிவாலயத்திருப்பணியில் செலவிட்டு இண்டிருப்பாயாக; உன்மூலம் திருவருள் விளக்கமாகும்.''

என்னும் வார்த்தைகளே மாணிக்கவாசகர் திருச்செவிக்கேட்டன. அவ்வளவுதான், சிவகுருவைக் காணவில்லை. முன்னரிலும் பேரானந்த மெய்தப்பட்ட வாதவூரர் வாயினின்றும் எழுந்த அதிச் சொற்களுக்கு அளவேயில்லை. அவர்தந் தாலம் மணிவாசகங்களைப் பொழியத் தொடங்கிற்று. அவர் தாயினைக் காணச் சேய் போலக் கதறினர்.

"வஞ்சகனே கொக்கலனும் உடலைத்
தீவாய்
மடுக்கிலேன் வரையுருண்டு மாய்கிலே
னல்லேன்
நஞ்சுசொருகு வாளாலும் குறைப்பே
னல்லேன்
காதலே யதவு நின தடைமையென்றே
அஞ்சினேன் தானேயு மழியாதவி
ஐயனே நினைப்பிரிந்தம் ஆற்றகில்லேன்
என்செய்கேன் எந்தாயோ! எந்தாயோ
வென
றிரங்கினர் புரண்டழுதார் இவை
சொல்வார்.'

தம்முடன் வந்தாரை நோக்கி; ஆடித் திங்களிற் பரிகள் வருமென்றரசர்க்குரைமி னென்றனுப்பினர். பரிப்பணம் திருப்பணிக்காயிற்று. அரசு, அமைச்சு, தொழில், குதிரை, மதனை, பொன், வீடுவாசல் முதலிய சகல நினைப்புகளும் அகோஹரா .........! திருப்பெருந்துறையிற் தேவாலயம் எழும்பிவிட்டது.

குறித்த காலங்கிட்டியும் குதிரையையுங் காணாத அரசனுக்குச் சேவகர்கள் நாளுக்கு நாள் கோளேற்றினர். அரசன் வாதவூரடிகளுக்கு "உடனே வருக" என ஓலைபோக்கினன். அதிற்கவன்ற வாதவூரடிகள் அன்றிரவு கண்ட கனவிற் தேறி மறுநாள் அரண்மனைக்கேகி ஆவணி மூலத்திற் குதிரைகள் வருமென வப்புகல அரசனும் மனத்தெளிந்தான். ஆவணிமூலத்து முதலும் அரசன் ஆவலோடு, குதிரை வெள்ளத்தைப் பார்த்து வரும்படி தூதரை ஏவினன். அவர்களுக்குக் கடைதான் மிச்சம். குதிரைப்பணம் கோயிலாய் விட்டதை யறிந்த அரசன் மாணிக்க வாசகர்க்குக் கடுந் தண்டனை விதித்தான். தண்டனை செய்யுஞ் சேவகர் கொன்ன குறைந்தவர்கள்; அவர்கள் அதில் அரசனுக்கு அண்ணமார். எவ்வித வருத்தங்களையும் பொருட்படுத்தாது இறையிடத்தே பதிந்த சிந்தையராய் மணிவாசக வண்ணலிருந்தனர். அவர்;

"பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்
பரனே!
பற்றநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே!
திருப் பெருந்துறை யுறை சிவனே!
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைப்
பேன்
ஆண்ட நீ அருளிலையானால் வார்கட
லுலகில் வாழ்கிலேன் கண்டாய் வருக
வென்றருள் புரிவாயே.(வாழாப்பத்து.௧)

என்று சிவகுருநாதரிடமே குறையிரந்தார்.

தூளி மறைத்தது வானை; தாரகமுந்தினர் பரிவலவீரர். விஷயம் அறிந்தனன் அரசனுமின்னே. விடுமின்! அமைச்சரைச் சிறைவிடுமின்! என்றே கூவி அவரிடம் சென்று மன்னிப்பு வேண்டி அவரையு மழைத்துக்கொண்டு குதிரைகளைக் காணும் ஆவலில் அரசன் மூழ்கியிருந்தனன். அவன் நினைவு குறைவாய் இருந்தது. குதிரை வெள்ளம் கணக்கெட்டாதனவாய் இருந்தன. அரசன் குதிரை வீரனை வரவேற்று வெகுமதி வழங்கினன். முழுமுதலான தலைவன் சதிகதித்த குதிரைகளின் பெயர், வகை, தொகை, வகுப்பு, அழகு, திறமை சுழியாவுங் கூறி வழி நடத்திக் காட்டி வாழி கூறிக் கயிறு மாறிக்கொடுத்தான். அகன்ற லாய முற்றங் குதிரைகள் கட்டப்பட்டிருந்தன, அரசனு மிவை கொண்டு பகை வெல்லலாமென ஆகாய மாளிகை போட்டான்.

உலகை இருள் கவிந்தது. பேயுந் துயின்ற பேர் யாமம், குதிரைலாய மட்டுமல்ல; ஊரெங்கும் உக்யா! என்ற சத்தம். ஊர் முழுவதும் அல்லோல கல்லோலம், எங்கும் செத்தேன், பட்டேன், பிழைத்தேன் என்ற ஓசை. 'மன்னரேறே! பரிகளெல்லாம் நரிகளாயின; அம்மட்டோ நின்ற குதிரைகளையும் அவை ஊறுசெய் தொழித்தன, எனக் காவலர் கூறிய கூற்று புண்ணிற் புளி

தொடர்ச்சி 4ம் பக்கம்

# பாடப் புத்தகம் சம்பந்தமான விசாரணை

## அகில இலங்கைச் சுயபாஷா ஆசிரியர் சங்கத் தூதுக்கோஷ்டியின் சாக்ஷியம்

## மிஸ்றர் ஜயசேகரா கூறியவை

சென்ற வியாழக்கிழமை காலை பாடப்புத்தக விசாரணைச் சபையின் முன் கொழும்பு அகில இலங்கைச் சுயபாஷா ஆசிரியர் சங்கத்தின் தூதுக்கோஷ்டி யொன்று சாக்ஷியங் கூறிற்று. இத்தூதுக்கோஷ்டி 10 அங்கத்தவர்களை யுடையதாயிருந்தது. மிஸ்டர் A. D. ஜயசேகரா அத் தூதுக்கோஷ்டியின் தலைவராகவிருந்தார்.

மிஸ்டர் ஜயசேகரா எடுத்துக் கூறியவை வருமாறு:—

யாழ்ப்பாணத்தைத் தவிர இலங்கையிலுள்ள அரசினர் உதவி நன்கொடை பெறும் 900 பாடசாலைகளின் பிரதிநிதிகளாயுள்ள 2,300 பேர் எங்கள் சங்கத்தில் அங்கத்தவராயிருக்கின்றனர். அந்த அங்கத்தவர்களனைவரும் ஆசிரியர்களேயாவர்.

வெவ்வேறு சமயத்தைச் சேர்ந்த பள்ளிக்கூட அதிகாரிகள் தங்கள் சமயக் கோட்பாடுகளுக் கியைய முழுவதும் தங்கள் பள்ளிக்கூடங்களில் உபயோகிப்பதற்காகவே பாடப் புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்கள். குறித்த பள்ளிக்கூடங்களுக்கு இது லாபத்தைத் தரக்கூடியதாக விருக்கின்றது. ஆயின், இது பிழை என்பதை அவர்கள் நினைக்கவில்லை. பள்ளிக்கூடங்களிலேயே புத்தகக்கடைகளை அமைப்பது நல்லதல்ல என்று நாம் கருதுகின்றோம்.

### புத்தகங்களைத் தெரிதல்

பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்களுக்குப் பள்ளிக்கூட மனேஜர்களும் வித்தியாபகுதி உத்தியோகஸ்தர்களும் முன்னுரை எழுதுவதை நாம விரும்பவில்லை. அவ்வாறு அவர்கள் முன்னுரை எழுதுவது குறித்த புத்தகங்களை அதிகமாக விற்கச் செய்வதற்காகவே பெரும்பாலும் நடைபெறுகின்றது. ஆசிரியர்களை பாடப்புத்தகங்களைத் தெரிந்தெடுக்க விடப்படவேண்டும். மனேஜர்கள் அதில் தமது செல்வாக்கை உபயோகிக்கப்படாது.

மிகச் சிறந்தனவும் மலிவானவும் வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப்பட்டனவுமான வேறு பல பாடப்புத்தகங்களிருப்பவும், பரீக்ஷைகளுக்குரிய புத்தகங்களாக ஒரு சிலவற்றை மாத்திரம் வித்தியாபகுதியார் குறித்துப் பாடப்புத்தகங்களை வரையறைப்படுத்துவதை நாம் எதிர்க்கிறோம். சில வேளைகளில் வித்தியாபகுதியாரால் சிபார்சு செய்யப்பட்ட பாடப் புத்தகத்தை எழுதினோரே அப்பாடத்தைப் பரீக்ஷிப்பவராகவும் வந்துவிடுகின்றார்.

பழைய சிங்களக் காவியங்கள் சம்பந்தப்பட்ட வரையிற் சிலர், அப்பழைய காவியங்களை எடுத்து அவற்றிற் சிலவற்றை நீக்கி விட்டு அதற்குப் புதுவதாக ஒரு பெயரையுமிட்டுத் தங்கள் புத்தகம் போல வெளியிட்டு அதற்குப் பதிப்புரிமையும் செய்துகொள்ளுகிறார்கள். இந்த வழக்கம் பரம்பப்பார்க்கின்றது.

வித்தியாபகுதியார் பரீக்ஷைக்குரிய பாடங்களைக் குறிக்கும் அட்டவணையை வெளியிடும்போது அப்பாடங்களுக்குரிய பாடப்புத்தகங்களையும் அதனோடேயே குறித்து அனுப்புகின்றனர். அப்புத்தகங்களை வெளியிட்டோருக்கும் வித்தியாபகுதியாருக்கு மிடையே ஒருவித விளக்கம் இல்லாவிடின் இது நிகழ முடியாது. இவ்வாறு நடைபெறும் அந்த இரகசியமுறை காரணமாக, பாடப்புத்தகங்களை மிக்க திறமையாக எழுதக்கூடியவரை அவ்வாறு திறம்பட எழுத முடியாதாரும் வெற்றிபெறக்கூடியதாக அதாவது தமது புத்தகங்களைப் பாடப்புத்தகமாக்குவதிற் சித்தியடையக்கூடியதாக இருக்கின்றது.

### சபை மாற்றியமைக்கப் படவேண்டும்

இப்போதிருந்துவரும் பாட அட்டவணை இருக்கும்வரை, இப்போதுள்ள பரீக்ஷை முறை இருக்கும் வரை, பாடப்புத்தகங்களின் தொகையேனும் கொப்பிபுத்தகங்களின் தொகையேனும் குறைக்கப்படலாமென்று நான் நினைக்கவில்லை.

புத்தகவியாபாரிகள் அதிக 'கொம்மிஷன்' கேட்கிறார்கள். அதனால் புத்தகங்களின் விலை மிக அதிகமாகின்றது. பாடப்புத்தக சபையில் அங்கத்தவர்களாக இருப்பவரிற் சிலர் பாடப்புத்தகங்களை மதிப்பதற்குத் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள். புத்தகங்களை அங்கீகரிக்கும் முறை மாற்றியமைக்கப்பட வேண்டும். பாடப் புத்தகசபையே (கொமிற்றி) மாற்றியமைக்கப் படவேண்டும். ஆரம்ப விஞ்ஞானம்பற்றி றெவரண்ட் A. E. ஒபேட் அவர்கள் சிங்களத்தில் எழுதிய புத்தகம் அச் சபையால் அங்கீகரிக்கப்படவில்லை. விஞ்ஞானத்தைப்பற்றிச் சிங்களத்தில் எழுதப்பெற்ற முதலாவது புத்தகம் இதுவேயாகும்.

பாடப்புத்தகங்களின் தொகையைக் குறைப்பதற்குப் பள்ளிக்கூடங்களில் வகுப்பு வாசகசாலைகளை ஏற்படுத்தல் நலம். பாடப் புத்தகங்கள் இன்னின்ன அச்செழுத்துக்களிற்றான் அச்சிடப்படவேண்டுமென்று வித்தியாபகுதியார் ஏற்படுத்திய பிரமாணம் புத்தகங்களை அச்சிடுதற்குரிய செலவை மேலும் அதிகரிக்கச்செய்துவிட்டது.

# வங்க மந்திரிக்கு நேர்ந்த விபத்து

### தெய்வாதீனமாக உயிர்தப்பினர்

டார்ஜிலிங், ஜூன் 22

வங்கவிவசாயக் கைத்தொழில் மந்திரி கனம் தம்ஸ தீன்கான் இன்று காலை ஸிரியாவிலிருந்து மோட்டார்க்காரில் இங்கு வந்தபோழுது தெய்வாதீனமாக உயிர்தப்பினர். மோட்டோர்க்கார் ஒரு திருப்பத்தில் வரும்போது சரேலென்று திருப்பி விட்டமையால் அதன் கதவுகளிலொன்று திறந்துவிட்டது. அதன் காரணமாகக் கனம் தம்ஸதீன் காரிலிருந்து பாதையில் தூக்கி எறியப்பட்டார். ஆயின் சொற்ப காயங்களோடு அவர் தப்பினர்.

# நடுகல்லின் திருவிளையாடல்

பண்டிதர் திரு. கா. போ. இரத்தினம் அவர்கள்

"எட்டுத்தொகை பத்துப்பாட்டு முதலிய சங்கநூல்களிற் பெரும்பாலும் உண்மையான விஷயங்களும், இயற்கையோடு இசைந்த செய்திகளுமே கூறப்பட்டுள்ளன. பிற்கால நூல்களிற் காணப்படும் கற்பனைகளும் புனைந்துரைகளும் அற்புதங்களும் அந்நூல்களிற் காணப்படா, எனினும், அந்நூல்களில் ஒன்றாகிய புறநானூற்றில் கல்லோடு சம்பந்தப்பட்ட ஓர் அற்புதச் செய்தி கூறப்பட்டிருக்கின்றது. இச் செய்திக்கு அந்நூலிலுள்ள செய்யுள் ஒன்றிலும் ஆதாரம் காணப்படுகிறது. இச் செய்தியை ஆயுமுன் கல்லோடு சம்பந்தப்பட்டனவாகப் புராணங்களிலிருந்து அறிகின்ற சில செய்திகளைச் சுருக்கமாக நினைவிற்குக் கொண்டுவருதல் இப்புறநானூற்றுச் செய்தியோடு அவற்றின் வித்தியாசத்தை ஒப்பிட்டு நோக்குதற்கு இன்றியமையாததாகும்.

சிவபெருமான் திரிபுரதகனத்திற்காக மேருமலையை வில்லாக வளைத்தார். இச் செய்தி பல்நூல்களிற் கூறப்பட்டுளது. 'குன்றவில்லி' என்பது அவருக்கொரு பெயராகவும் வந்துவிட்டது. மேருவும் தனுவாக வளையவில்லையோ? என்று வினவினர் தாயுமானவர்.

தனது நாயகனுடைய சாபத்தாற் சிலையுருப்பெற்ற அகலிகை இராமரின் திருப்பாதம் பட்டவுடன் தன்னுருவம் பெற்றாள். இதன் விரிவைக் கம்பராமாயணத்தில் அகலிகை படலத்திற் காணலாம். இச்செய்தியையும் தாயுமானவர், 'இராமனடியார் சிலையும் பட மங்கையாகவில்லையோ? என்று குறிப்பிட்டார். இன்னொரு செய்தி திருவிளையாடற் புராணத்தில் காணப்படுகிறது. தமக்கு உபதேசிக்கப்பட்ட அட்டமாசித்திகளையும் இயக்கமாதர் அறுவரும் மறந்த குற்றத்திற்காகக் கருங்கல்லாகச் சபிக்கப்பெற்று பட்டமங்கையில் கல்லுருக்கொண்டு கிடந்தனர். பின்னர் சிவபெருமானுடைய திருவருள் நோக்கத்தால் சாபம் நீங்கித் தொல்லுருப்பெற்று அட்டமாசித்திகளையும் அறிந்தனர். இதனை மாணிக்கவாசகர், பட்டமங்கையிற் பாங்காயிருந்தங்கு அட்டமாசித்திய ருளிய அதுவும் என்று குறிப்பிட்டார்.

இனிப் புறநானூற்றுச் செய்தியைக் கவனிப்போம்:- புறநானூற்றிற் கூறப்படும் அரசர்களுள் கோப்பெருஞ் சோழனுக்குத் தனி இடமுண்டு. இவனுக்கும் புலவர்திலகராகிய பிசிராந்தையாருக்குமிடையில் உள்ள நட்பின் பெருமையும் உயர்வும் உலகமறிந்தது; புலவர்களால் புகழ்ந்து பாடப்பெற்றது.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சி
தான்
நட்பாம் கிழமை தரும்"

என்னும் திருக்குறளுக்கு உதாரணமாகப் பரிமேலழகரால் எடுத்துக்காட்டப்பட்டது. இப்படிப்பட்ட சிறந்த கோப்பெருஞ் சோழன் தன்னொடு பகைத்துப் போர் செய்யவந்த தன் மக்களோடு எதிர்த்துப் பொரச் சென்றகாலை புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும் புலவர் கூறிய அறிவுரையைக் கேட்டுப் போர்செய்யாது வடக்கிருந்து இறந்தான். அவனொடு அவர் உயிரனைய பிசிராந்தையாரும் வேறு சிலரும் வடக்கிருந்து உயிர் நீத்தனர். பொத்தியார் என்னும் புலவரும் வடக்கிருக்கச் சென்றபொழுது அவரைச் சோழன் "நின்மகன் பிறந்தபின் வா" என்று கட்டளையிட்டான். இது பொய்கையார் பாடிய,

"அழலவிர் வயங்கிழைப் பொலிந்தமேனி
நிழலினும் போகாநின் வெய்யோள்
பயந்த
புகழ்சால் புதல்வன் பிறந்தபின்வா வென
என்னிவண் ஒழித்த அன்பிலாள''

என்னும் அடிகளால் அறியப்படுகிறது.

பொத்தியார் சோழன் சொற்படி தம் வீடு சென்று சில நாட்களில் மைந்தன் பிறந்தபின் சோழன் வடக்கிருந்த இடத்திற்குச் சென்றார். ஆண்டு அரசன் உயிர் நீத்த இடத்திலிருந்த நடுகல்லை

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

# ஐவர் மலை

ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை, பி. ஏ. பி. எல்.

பழநியம்பதியின் மேற்கே ஒன்பது மைல் தூரத்தில், நீர் நிலமட்டத்திற்கு 1402 அடி உயரத்துக்கு மேல் ஓர் அகன்ற நிலப்பரப்பின் நடுவில் பூமியினின்றும் திடீரென முளைத்தது போன்ற உயரிய பாறை ஒன்று தன் உச்சியிலே ஒரு விநாயகர் கோயிலுடன் திகழ்கின்றது.[1]

அதற்குச் சிறிது தூரத்தில் ஒரு பெரிய மலையும் அதன் சகோதரி போல் அதனைப் போற்றி நிற்கின்ற தன்மையாய்த் தோன்றுகின்றது. ஐவர் மலைக்கடுத்து வானளாவிய தென்னை பலாமரங்களும், தெளிந்த நீரோடைகளும், பசந்த தோட்டங்களும் கண்ணுக்கினியகாட்சி அளிக்கின்றன.

தமிழ்நாடெங்கும் இதுபோன்ற பெரும் பாறைகள் பலவுள. அவற்றுள் தலைமையுடையவை திருப்பரங்குன்றம், அழகர்மலை, மேட்டுப்பட்டிச் சித்தர்மலைக்குகை, யானைமலை, கொங்கர் புளியங்குளம், கருங்காலக்குடி முதலியனவையாகும்.[2] இத்தகைய குன்றுகளின் உச்சிகளிலேனும், சரிவுகளிலேனும் காணப்படுகின்ற மலையாங்குகள் 'பஞ்சபாண்டவர் படுக்கை'என மக்களாற் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. இவ்வழக்கு, பஞ்சபாண்டவர்களது வனவாசத்தின் சார்பாக எழுந்த பல கதைகளை ஒட்டியதென்பதற்கு இடந்தருகின்றது. ஆனால், வேறொரு செய்தியும் இங்கே குறிப்பிடுவதற்குரியது. தென்னிந்தியாவிலே சமண மதம் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கி வளர்ந்து, கி. பி. 7,8-ம் நூற்றாண்டுவரையில் சிறப்புற்றிருந்ததென்பது சரித்திர உண்மை. அச்சமயத்துறவிகள் பெரும்பாலும் மக்கள் நடமாட்ட மற்ற இடங்களாகிய மலையுச்சிகளிலும், ஒதுக்கிடமாகிய பாறைகளுக்கிடையிலும், வெயில், மழை, குளிர் முதலியவற்றினாலே துன்பம் நிகழாத பாதுகாப்பிடங்களிலும் வதிந்து வந்தனர். அதற்குச் சான்றாக, அவர்கள் வாழ்ந்த மேற்குறிக்கப்பட்ட இடங்களிலே காணும் பாறைகளிலே அவர்களுள் சிலர்தம் பெயர்களை அக்காலத்திய பிராமி, வட்டெழுத்து முதலிய லிபியிற் பொறித்து வைத்திருக்கின்றனர். இன்னும் சில இடங்களில் அவர்கள் தூங்குதற்குரிய கற்களைச் சமமாகச் செதுக்கியும், தலையணைகளைப்போல் அமைத்தும் செய்துகொண்ட வசதிகளைக் காணலாம். இக்காரணங்களால் மேற்குறித்த இடங்கள் அக்காலங்களிலே ஜைனப்பள்ளிகளாகவும், ஜைனத் துறவிகள் உறைவதற்கான இடங்களாகவும் இருந்தன என்பதை அறியலாம்.

இத்தகைய அமைப்புக்களை இந்த ஐவர் மலையிலும் காணலாம். ஏறக்குறைய 160 அடி நீளமும், 13 அடி உயரமும், 30 அடி அகலமும் உள்ள ஒரு நீண்ட பாறைக்குகையை ஆறு கூறாகத் தடுத்து, அப்பாறையின் மீது 18 அங்குல உயரமுள்ள ஜைன தீர்த்தங்கரரின் உருவச் சிலைகள் பலவகையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வுருவச் சிலைகளிற் சில நின்ற நிலையாகவும், வேறு சில உட்கார்ந்த நிலையாகவும், பின்னும் சில படமெடுத்த நாகத்தின் கீழ் அமர்ந்த நிலையாகவும், மற்றும் சில மும்முடி சூடிய தோற்றமாகவும், இன்னும் சில இருமருங்கும் சாமரை வீசி நிற்கும் நிலையாகவும், வேறு பல இவையன்றிப் பல்வேறு வகைகளாகவும் காட்சியளிக்கின்றன.

இப் பரந்த பாறையைச் சுற்றிப் பல வட்டெழுத்துக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆயின், இவை இன்ன என ஆராயப்பட்டனவா என்பது தெரியவில்லை. ஆகவே, இம்மலைக் குகைகள் பல நூற்றாண்டுகளுக்குமுன்னர் ஜைனப்பள்ளிகளாக இருந்தனவென்றும், ஜைனர்கள் மறையவே அவ்விடங்களைப் பொதுமக்கள் பஞ்சபாண்டவர் படுக்கை என்று வழங்குவாராயினரென்றும் தெரிகிறது. நாளடைவில் இச்செய்தி வலியுறுதற்கு அம்மலைக்குகைகளுக்குக் கீழும், அடிவாரங்களிலேயும், கன்னிமார் திரௌபதை ஆகியோர்க்குக் கோயில்களும் ஏற்பட்டதனால் இப்பெயர் வழங்கலாயிற்றென்று கூறலாம். இதற்கேற்ப இம்மலையிலும் திரௌபதைக்கு முதன்மையான கோயிலும், அதனையடுத்து விநாயகர், தண்டபாணி கோயில்களும் காணப்படுகின்றன. இம்மலையை அடுத்த ஐயம் பாளையம் கிராமத்திலிருந்து ஒரு பண்டாரம் நாள்தோறும் இங்குவந்து தீர்த்தங்கரருக்கு அபிஷேகமும், ஏனைய தெய்வத் திருமேனிகளுக்குப் பூசையும் இயற்றி வருகின்றார். இம்மலைமீதுள்ள பிள்ளையார் கோயிலும் சமீப காலத்திலேயே கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆனால், ஐவர் மலைக்குள்ள சில சிறப்பியல்புகள் ஆராய்வதற்குரியனவாகும். ஐவர்மலை என்ற பெயராலும், இம்மலையின்மீது காணும் சில குறிகளாலும் இதனைச் சுற்றியுள்ள இடப்பெயர்களைப் பற்றிய ஆராய்ச்சியாலும் உண்மையாகவே இம்மலையில் ஐவர்கள் வதிந்திருந்தார்களென எண்ண இடமுண்டாகிறது. பஞ்சபாண்டவர் வனவாசம் புரிந்தமைக்கும், ஐவர்மலைக்கு அணித்தாயுள்ள தாராபுரம்,காரைத்தொழுவு, கடத்தூர், பொருந்தல் ஆகிய ஊர்ப்பெயர்களுக்கும் பல தொடர்புகள் காணப்படுகின்றன. தாராபுரம் விராடபுரத்தின் பெயர்த்திரிபென்றும், விராடனுடைய பசுக்கூட்டங்களைக் கவர்ந்து கடத்தின இடமே கடத்தூர் என்றும், அம்மாடுகளைத் தொழுப்பூட்டியிருந்த இடமே காரைத்தொழுவு என்றும், அம்மாடுகளைத் திருப்பிக் கொணர்ந்த இடமே திருப்பூர் என்றும், ஐவருள் அருச்சுனன் தவம் புரிந்த இடமே வராகிரிச் சாரலான பழநிமலை என்றும், அதற்கு ஏழாவது மைலில் உள்ளதே பழம் மீண்டும் பொருந்திய இடமாகிய பொருந்தல் என்றும் அப்பெயர்களுக்குப் பொருத்தம் காட்டி வழங்குவதை நோக்குங்கால் அக்காலத்தில் பாண்டவர் ஐவர்மலை என்ற இம்மலைக் குகையில் வதிந்திருக்கக் கூடும் என ஒருவாறு கூறலாம். இன்றும் தாராபுரத்திற்கு வடக்கே சிறிது தூரத்திலுள்ள மருத காளியம்மன் கோயிலில் ஒரு வன்னிமரத்தின் பொந்திலேதான் இப்பாண்டவர்கள் விராடனிடம் மறைந்துறைதற்கு முன்னர், தங்கள் ஆயுதங்களை மறைத்து வைத்துச் சென்றனர் என்ற வழங்கும் இக்கூற்றுக்கு ஆதாரமாகின்றது.

ஆகவே, ஐவர்மலை பாரதகாலத்திலே சிறிது காலம் அஞ்ஞாதவாசத்திற்கு இடமாயும், பிற்காலத்தில் ஜைன சந்நியாசிகள் வதிந்து வருவதற்குரிய இருக்கையாகவும் இருந்திருக்கலாம், இதனை அறிஞர்கள் ஆராய்வார்களாக.

—கலைமகள்

---

[1] இம்மலை அயிரைமலை, அயிரூர் மலையெனவும் வழங்கப் பெற்றதென்பர்.

[2] Epi. Rep. 1918. p. 7.

னர் வானவ ரானினம்
ல் வேந்தனுமோங்குக
ல் லாமர ஞமமே
முந்தயர் தீர்கவே

து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ஷு
ஆனிமீ கஉ திங்கட்கிழமை

## கோரமான யுத்தம்

ஜர்மனியருக்கும் ருஷியருக்குமிடையே சென்ற வாரந் தொடங்கி நடந்துவரும் யுத்தம் மிகவுங் கோரமானதெனலாம். ஆரம்பத்தில் ருஷியர் தம்மைத் தாக்கிய பகைவருடன் நிர்வகித்து நின்று சமர் செய்தனரெனினும் நேற்றின்றுவருந் தந்திச்சமாசாரங்களைக்கொண்டு ருஷியர் பின்வாங்குகின்றனரெனச் சொல்லக்கிடக்கின்றது. ருமேனியர் வின்லண்டினர் ஹங்கேரியர் என்னுமிவர்களும் ஜர்மனியருக்குத் துணையாக ருஷியருக்கு மாறாக இந்த யுத்தத்திற் கலந்துகொண்டனராம்; ருஷிய ஆகாயப்படை ஹங்கேரி நாட்டின்மீது வெடிகுண்டுகளைப் பெய்கின்றதாம். வடக்குப் புறத்தில் ருஷிய சைநியம் பின்னிடுவதாகச் சொல்லப்படுகின்றது; ஆனால் மேற்குப் புறத்தில் ருஷியர் வெற்றியடைந்து வருகின்றனராம். ஜர்மனிய சைநியம் இப்பொழுது மூர்மன்ஸ்க் என்னுமிடத்தை நோக்கிச் செல்கின்றதாம்; முந்திய யுத்தத்தில் ருஷியருக்கு அமெரிக்கர் உணவுப்பொருள் அனுப்பிய தானம் இதுவெனச் சொல்லப்படுகிறது.

இதுகாறும் பொதுநிலைமை வகித்து நின்றதாகிய சுவீடின் நாடு இந்தச் சமயத்தில் ஒரு பெரும்பிழை செய்துவிட்டதென்றே நாம் சொல்லவேண்டியிருக்கிறது. சுவீடின் அரசினர் ருஷியருக்கு மாறாக ஜர்மனிய சைநியத்தைத் தம்நாட்டிற்கூடாகப் போதற்கு அநுமதி செய்திருக்கின்றனராம், இப்படி அந்த அரசினர் செய்தமைக்குக் காரணம் வின்லன்டினரை ருஷியர் தாக்காமல் தடுப்பதற்காக எனச் சொல்லுகின்றனர். சுவீடின் செய்த இச் செய்கை எங்கள் பிருத்தானியருக்கு அதிக ஆத்திரத்தை விளைக்கலாயிற்று. சுவீடின் அரசினர் இப்படி நிலை மாறியதற்குக் காரணம் ஜர்மனியர் மீது கொண்ட அபிமானத்தினாலல்லவாம். அச்சத்தினாலாம். என்செய்யலாம்! கால வித்தியாசத்தினால், மித்திரராயுள்ளார் சத்துருக்களாக மாறுபடுதலுமுண்டு.

ஜர்மனிய ருஷிய யுத்த விஷயமாக ஜப்பானியர் இற்றைவரையில் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடக் காணோம்; ஆனால் அவர்கள் பலமுறை கூட்டங்கள் கூட்டி ஆலோசிக்கிறார்களென்று மாத்திரங் கூறப்படுகிறது.

சிறியாப் பகுதியிலும் அபிஸீனியாவிலும் பிருத்தானியரும் ஐக்கிய சைநியமும் பகைவரைப் பின்னிடச் செய்து பல தானங்களைக் கைப்பற்றிக்கொண்டு முற்பட்டுச் செல்கின்றதெனச் சொல்லப்படுகின்றது. பிருத்தானிய ஆகாயப்படை ஜர்மனியைச் சேர்ந்த டஸல்டோவ், கீல் முதலிய தானங்களில் வரையின்றி வெடிகுண்டுகளை இடுகின்றனவாம். ஆனால், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டுமென்றபடி, இந்த நேரத்தில் பிருத்தானியரும் அமெரிக்கரும் பிருத்தானிய ஐக்கிய சைநியங்களுஞ் சேர்ந்து ஜர்மனியரை அடித்துவிடவொண்ணாதா என்றதொரு ஆசங்கை இங்குள்ளார் எல்லார் மாட்டும் நிகழுகின்றது. ருஷிய ஜர்மனிய யுத்தத்திலே ஹிட்லரை வெற்றியடையவிட்டாற் பின்னர் அவரை எவரும் இப்போதைக்கு வெல்வது அரிதென்று நினைப்பது தவறாகுமா?

*

## இது நல்ல உபாயமா?

சில வாரங்கட்கு முன் இலங்கை இந்தியர் மகாநாட்டுக் கூட்டம் மாத்தளையில் நடந்தபோது, அப்பகுதி அரசாங்க சபைப் பிரதிநிதியாக விருக்கும் மிஸ்றர் B. H. அலுவிகாரை சிங்களருக்கும் இலங்கை இந்தியருக்கு மிடையே யுள்ள பிணக்கு விஷயமாகப் பின்வருமாறு கூறினாராம்:

“சிங்களருக்கும் இந்தியருக்குமிடையே இப்பொழுதுள்ள பிணக்கைத் தீர்ப்பதற்குச் சிறந்த உபாயம் இந்தியர் சிங்கள மொழியைப் பயின்று, அவர்களுள் ஆண்கள் சிங்களக் கன்னியரை மணந்துகொள்வதேயாகும்” என்பதேயாம்.

இது நல்ல உபாயந்தான் ஆனால் இதில் ஒரு சந்தேகம் பிறக்கின்றது. இந்த இருபாலாருங் கூடிப் பெறும் பிள்ளைகள் வளர்ந்து மனுஷரானபின் சிங்களராவரா? இந்தியராவரா? இல்லையேல், “ஆங்கில இந்தியர்” என்று இந்தியாவில் வழங்குவதுபோற் சிங்கள இந்தியராவரா? சரி, சிங்கள இந்தியர் என்று ஒரு சாதியைப் புதிதாக வகுத்து அக்காலத்தில் வகுத்துக்கொள்ளலாம். இவர்கள் பின் பௌத்த சமயத்தை அநுசரிப்பதா? இல்லையேல் இந்து சமயத்தை அநுசரிப்பதா? தாயின் மார்க்கத்தைக் கைக்கொள்ளத் தலைப்பட்டால் தந்தைக்குப் பிரியமாகவிராது; தந்தையின் மார்க்கத்தை அநுசரிக்கத் தலைப்பட்டால் தாய்க்கு விருப்பமாக இராது. மேலும் பிள்ளைகள் விஷயத்தில் தாயின் அதிகாரத்தைக் காட்டிலும் தந்தையின் அதிகாரம் அதிகமாகச் செல்லும் எனக் காத்திருப்பதுதான் இயல்பு. ஆனால் தந்தையே தன் மனையாளின் அதிகாரத்துள் அடங்குவானேயானால், பிள்ளைகள் தாய் சொற்படியே நடக்கவேண்டி நேரும். இது ஒருபெரிய ஆறுதல்தான். இப்படிப் பிறக்கும் பிள்ளைகள் வளர்ந்து மனுஷராய்விட, இந்தக் கலப்புப் பிறப்பு விருத்தியடைய, பிற்காலத்திலே சிங்கள இந்தியரென்று ஒரு சாதியும் உண்டாய்விட, இந்தச் சாதிய பிணக்கு காலகதியிற் கூடுமே யொழியக் குறையாதே? மிஸ்ரர் அலுவிகாராவின் உபாயத்தை ஜர்மனியர் பிருத்தானியர் பிரான்ஸியர் ருஷியர் அமெரிக்கர் யப்பானியர் துருக்கியர் இன்னும் உலகிலுள்ள மூன்று கண்டங்களிற் பிணக்குற்று இப்பொழுது யுத்தஞ் செய்யும் சாதியார் எல்லாருங் கைக்கொள்ளுவரேல், இக் கொடிய யுத்தமும் அறவே ஒழிந்துபோக உலகம் முழுதும் சமாதான முண்டாகுமே. ஒவ்வொரு சாதியார் தேசத்தார் சமயத்தார் பாஷையாரின் பாதுகாப்பின் பொருட்டு அரசியல்கள் நடைபெறுவதேயொழிய, இராச்சியத்தின் பொருட்டுச் சாதியையுஞ் சமயத்தையும் நாட்டையும் பாஷையையும் கொள்கைகளையும் மாற்றிக்கொள்ளுதல் முடியாதென்ற உண்மை அலுவிகாராவுக்குப் புலப்படவில்லைப்போலும்.

## மகோற்சவங்கள்

நேற்று (29-6-41) மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், நயினாதீவு நாகபூஷணியம்மன் கோவில் முதலிய ஆலயங்களிற் கொடியேறி மகோற்சவம் நடைபெறுகின்றன.

## கிளஸ்டர் நிதிக்கு 10,000 பவுண் வசூல்

### கொடிவிற்பனை மூலம் இலங்கையிற் கிடைத்தது

கிளாஸ்டர் நிதிக்காக இலங்கையில் நடத்தப்பட்ட கொடிவிற்பனையின்மூலம் கிடைத்த 10,000பவுண் லண்டனுக்கு அனுப்பப்படுவதாக ஸேர். ஜோண் டார்பிட் சென்ற வெள்ளிக்கிழமை ஒரு பத்திரிகை நிருபரிடம் தெரிவித்துக்கொண்டார்.

# உதவிப் பொலீஸ் சுப்பிறிண்டெண்ட் மீது வழக்கு

## வழக்காளிக்கு நீதிபதி கூறிய வார்த்தைகள்

### எங்கள்மீதும் வழக்குத் தொடருவாய் போலிருக்கிறது

26-6-41

“இன்னொருமுறை என்னையும் அல்லது டிஸ்திறிக் நீதிபதியையும் அல்லது மாகாணத் தலைவரையும் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடர்ந்தாலும் நீ தொடருவாய் போலிருக்கிறது” என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி திரு. குவின்டன் பேர்னுண்டோ சிவியாதெருவில் வசிக்கும் முத்துக்குமாரு காசிப்பிள்ளை யென்பவரை யாழ்ப்பாணம் உதவிச் சுப்பிறிண்டெண்டண்ட் S. D. சொய்ஸா இருமுறை கன்னத்தில் அடித்துத் தாக்கியதாக முறைப்பாடுசெய்கையில் கூறினர்.

முத்துக்குமாரு காசிப்பிள்ளை கூறியவற்றின் சாரமாவது:—

இம்மாதம் 24-ந் தேதி 8 அல்லது 8 30 மணி அளவில் நான் என்னுடைய சொந்தக்காரனாகிய சுந்தரம் என்பவருடைய வீட்டிலிருந்து திரும்பி ஒழுங்கையால் வருகையில் உதவிச் சுப்பிறின்டென்றன் “டோச்,” வெளிச்சத்தை அடித்தார். அப்போது அவர் என்னைக் கண்டு எங்கே போகிறாய் எனக் கேட்டுக்கொண்டே எனது முகத்தில் இரண்டுமுறை கையால் அடித்தார். நான் என்னுடைய வீட்டுக்குப் போகிறதாக அவருக்கு அறிவித்தேன். அப்போது இராசையா என்பவர் உதவிச் சுப்பிறின்டென்டன் என்பவருக்குப் பின்புறமாக நின்றார். கந்தையா என்பவர் பத்து யார் தூரத்துக்கப்பால் எனக்கு எதிரே சென்றார். இவர்கள் இருவரும் உதவிச் சுப்பிறின்டென்டன்ட் எனக்கு அடித்ததைக் கண்டார்கள். உதவிச் சுப்பிறின்டென்ட் எனக்கு ஏன் அடித்தார் என்பது எனக்குத் தெரியாது.

நீதிபதி:-உன்னை ஏன் தாக்கினார் என்பதை உனக்குத் தெரியாதா? —இல்லை.

நீதிபதி:-ஒரு குற்றமும் இல்லாமல் உனக்கு அவர் அடித்தாரா? அவர் என்ன பயித்தியகாரனா? நீ மறுமுறை என்மீதும் டிஸ்திறிக் நீதிபதி மீதும் அல்லது மாகாணத் தலைவர்மீதும் வழக்குத் தொடர்ந்தாலும் தொடருவாயென நினைக்கிறேன்.

நீதிபதி:-உனக்கு அடித்ததைப் பற்றி நீ யாருக்காவது முறையீடு செய்திருக்கிறாயா -இல்லை.

நீதிபதி:-யாராவது டாக்குத்தர் உன்னைச் சோதித்ததுண்டா? இல்லை எனக்குக் காயங்கள் ஒன்றுமிருக்கவில்லை. எனக்கு நோ மாத்திரந்தானிருந்தது.

மேசன் வேலை செய்யும் கந்தையா இராசையா கூறியவற்றின் சாரமாவது:—

இச் சம்பவத்தன்றிரவு பொலிஸ் உதவிச் சுப்பிறினடென்டோடு காசிப்பிள்ளையும் றோட்டில் நிற்கக் கண்டேன். அப்போது பொலிஸ் உதவிச் சுப்பிறின்டென்ட் காசிப்பிள்ளைக்குக் கன்னத்தில ஒருமுறை கையால் அடித்ததைக் கண்டேன். ஏன் அவர் காசிப்பிள்ளைக்கு அடித்தார் என்று எனக்குத் தெரியாது. நான் அவ்விடத்தில நிற்காது சென்றுவிட்டேன். அப்போது நான் காசிப்பிள்ளையோடு கதைக்கவில்லை. மறுநாட்காலை காசிப்பிள்ளையிடம் என்ன நடந்ததென விசாரித்தபோது அவர் தம்மைப் பொலிஸ் உதவிச்சுப்பிறின்டென்டன் எங்கேயிருந்துவருகிறாயெனக் கேட்டு அடித்தார் எனக் கூறினர்.

நீதிபதி விசாரணையை வருகிற 9-7-41ந் திகதிக்குத் தவணையிட்டு உதவிச் சுப்பிரின்டனுக்குக் கட்டளை பிறப்பித்தார். க-கி

## மூவர் கடலில் அமிழ்ந்தினர்!

### ஒருவர் பிரேதங் கண்டுபிடிக்கப்பட்டது

27-6-41

பூநகரி டிஸ்திறிக்கைச் சேர்ந்த குமுளமுனை யென்னுமிடத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒரு படகில் பிரயாணம் செய்தவர்களில் மூவர் கடலில் அமிழ்ந்தியதாகவும் காற்றின் வேகத்தால் படகு புரண்டதாகவும் கடலில் அமிழ்ந்திய ஓர் சிறுமியின் பிரேதம் பாலாவிக் கடற்கரையோரத்தில் மிதக்கக் காணப்பட்டதாயும் அறிகிறோம். அப்படகில் பிரயாணம் செய்த மற்றைய இரு சிறுவர்களையும் இன்னுங்கண்டுபிடித்துக்கொள்ளவில்லை யென்றும் அறிகிறோம். க. கி.

## கல்லூரியிற் புத்தகக் களவு

### கோட்டில் இரு மாணவர்மீது வழக்கு

27-6-41

யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் பாடசாலையில் சிறிது காலம் தொடக்கமாகப் பள்ளிக்கூட மாணவர்களின் புத்தகங்கள் களவாடப்பட்டு வந்ததை அப்பாடசாலை அதிகாரிகள் பொலிசாருக்கு அறிவித்திருந்தனர். இப்படி அப்பாடசாலையில் களவாடப்பட்ட புத்தகங்களிற் சில சிறாசியிலுள்ள பழைய புத்தக வியாபாரிகள் கடையில் விற்பனைக்கிருந்ததை அப் புத்தகச் சொந்தக்கார மாணவர்கள் கண்டுபிடித்துப் பாடசாலை அதிகாரிகட்கு அறிவித்தனர். அவர்கள் பொலிசாரை அனுப்பி விசாரணை செய்தபோது அப் புத்தகங்களை அப்பாடசாலையிற் கற்கும் மாணவர்களே களவாகவெடுத்து விற்றதாக அறிந்தனர். பின்னர்ப் பாடசாலை அதிகாரிகள் புத்தகங்களைக் களவாடியவர்களிற் சிலரை விசாரித்தபோது அவர்களில் ஒருவர் ஒத்துக்கொண்டதாகவுமறிகிறோம். இன்று யாழ்ப்பாணம் நீதிபதி திரு. குவின்டன் பெர்னுண்டோ முன்னிலையில் இருவர்மீது களவெடுத்ததாகக் குற்றஞ் சாட்டி வழக்குகள் தொடரப்பட்டன. நீதிபதி சிலரின் வாய்முறைப்பாட்டைப் பதிவு செய்த பின்னர் எதிரிகட்கு வருகிற 10-7-41ந் திகதிக்குக் கட்டளை பிறப்பித்திருக்கிறார். க, கி,

## யாழ்ப்பாணத்திற் கடைப்பிரமாணம்

### கடைகளிலுள்ள தொழிலாளரின் விண்ணப்பம்

யாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குள் உடனே கடைப்பிரமாணத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டு யாழ்ப்பாண நகரக்கடை வேலையாட்களின் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தொழில்மந்திரிக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். அவ்விண்ணப்பத்தில் அவர்கள், யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பான்மையான கடைகளிலுள்ள தொழிலாளர் கடைப்பிரமாணத்தை வரவேற்கிறார்களென்றும் அதற்கு யாழ்ப்பாணப் பட்டினசங்கத்தார் தங்கள் அபிப்பிராயத்தைக் காட்டாமலிருப்பதன் காரணத்தையும் எடுத்துக் காட்டியிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

## தேகவியோகம்

### ஸ்ரீமதி. செல்லமுத்து

யாழ்ப்பாண நகரசங்க அங்கத்தவரும் வழக்கறிஞருமாகிய திரு. க. ஐயாத்துரை அவர்களின் சகோதரியும் காலஞ்சென்ற திரு. ம. கந்தையா அவர்களின் மனைவியும் அரசாங்க வைத்தியப் பகுதியில் உத்தியோகம் வகிக்கும் திரு. க. சபேசப்பிரபுவின் அன்னையுமான ஸ்ரீமதி செல்லமுத்து இம்மாதம் 27-ந்திகதி வெள்ளிக்கிழமை இவ்வுலக வாழ்வை நீத்தார் என்னுந் துக்கச்செய்தியை இங்கு குறிப்பிடவேண்டியவர்களாகின்றோம்.

இவரைப் பிரிந்தவருந்தும் புதல்வர்க்கும் சகோதரர்க்கும் ஏனைய சுற்றமித்திரர்க்கும் எமது மனமார்ந்த அநுதாபம் உரித்தாகுக.

## செல்வச் சந்நிதியில் சைவப்பிரசங்கம்

நிகழும் விருஷவருடம் ஆனிமாதம் 7-ம் திகதி (20-6-41) வெள்ளிக்கிழமை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கந்தவேள் கோவில் மண்டபத்தில் கடவுள் வழிபாடு என்னும் விஷயம் பற்றி அராலி தெற்கு திரு. வே. கந்தையா (F. M. S. Pensioner) அவர்களால் ஓர் விரிவுரை இன்னிசை பாடல்களுடன் நிகழ்த்தப்பெற்றது.

கடித.

# ஜேர்மன் துருப்புகள் பேர்மன்ஸ்க் நோக்கிச் செல்கின்றன

## ஹாங்கோ பாதுகாப்பு அரண்கள் மீது பின்லாந்தியர் குண்டுமாரி

## ஹாங்கோவைச் சுற்றியுள்ள இடங்களில் ருஷியர் குண்டுகளை வருஷிக்கின்றனர்

ஸ்ரொக்ஹோம், ஜூன் 28

ஆர்டிக் சமுத்திரத்திலுள்ள ருஷியருக்குரிய நாட்டைத் தாக்குவதற்கு இன்று ஜேர்மானியர் ஆரம்பித்திருக்கிறார்களென்று கூறப்படுகிறது.

நோர்வேயிலிருந்து ஜேர்மன் துருப்புகள், வட பின்லாந்திலுள்ள ரண்ட்ராவைக்கூடாகக் கோலாக் குடாநாட்டுக்குச் செல்கின்றன என்று பேர்லினிலுள்ள சுவீடிஷ் பத்திரிகை நிருபர்கள் தெரிவிக்கிறார்கள். சென்ற மகாயுத்தத்தில் ருஷியா மமான்ஸ்க் என்னும் தமது துறைமுகம் வாயிலாகவே அமெரிக்காவிலிருந்து உணவுப் பொருள்களையும்பிறபொருள்களையும் பெற்றனர். இந்தத்துறைமுகத்தைத் தாக்குவதே இப்போது ஜேர்மானியரின் நோக்கமாகத் தெரிகிறது.

நிஷிற்றர்ஸ் பேர்லின் நிருபரின் கூற்றுப்படி கிழக்குப் பக்கமாகச் செல்லும் ஜேர்மன் யுத்தம் பெரும்பாலும் அல்ப்ஸ் மலைப் பகுதிப்போரைக் கொண்டதென்றும், பாலம் அமைப்பதில் ஆரம்ப அநுபவமுடையோர் பலரைக் கொண்டுள்ளதென்றும் தெரிகிறது.

அதே சமயத்தில் கோலாக் குடாநாட்டில் ருஷியர்களால் அமைக்கப்பட்டிருக்கும் நிலத்தின் கீழுள்ள விமான நிலையங்களின் மீது குண்டுவீசுதற்காகவும் ஜேர்மன் விமானப்படை செல்வதாகத் தெரிகிறது.

ஹாங்கோத்துறைமுகம் பின்லாந்தின் தெற்குக் கோடியிலுள்ளது. இது சென்ற வருஷம் நடைபெற்ற ருஷிய பின்லாந்து யுத்தத்தின் பின் ருஷியாவுக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. இத்துறைமுகத்தைச் சுற்றியுள்ள ருஷிய பாதுகாப்பு அரண்களை பின்லாந்திய பீரங்கிப் படைகள் தாக்க ஆரம்பித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஹங்கோவைத் தமக்குத் தங்கு நிலையாகக் கொண்ட ருஷிய, விமானங்கள் சுற்றியுள்ள இடங்களில் மிக உக்கிரமமாகக் குண்டுகளைப் பொழிந்து வருகின்றன. சிறப்பாக எக்கினேயில் துறைமுகத்திற்றான் குண்டுமாரி அதிகம் பெய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

## ஐரோப்பிய ஆடவர் பதிவு

### விதிகள் தயாராகி விட்டன

இந்நாட்டிலுள்ள ஐரோப்பிய ஆடவரைப் பதிவு செய்வது சம்பந்தமான சில விதிகள் பிரசுரிக்கப்படவிருக்கின்றன.

அரசசக்கரவர்த்தியின் நிரந்தர இராணுவத்தைச்சேர்ந்தவர் சேவைக்கு அழைக்கப்பட்டிருக்கும் ரிசேவ் படையினரையுந் தவிர இலங்கையில் மூன்று மாதங்களுக்கும் அதற்கதிகமாகவும் வசித்துவரும் ஐரோப்பியர்கள் யாவரும், அவர்கள் எந்த வயதினராகவோ அல்லது ஜாதியினராகவோ இருந்தாலுஞ் சரி தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று மேற்படி விதிகளிற் கூறப்பட்டிருக்கிறது.

15 வயதுக்குட்பட்ட ஆண்களின் பதிவுச் சீட்டுக்களை மேற்படி குழந்தைகளின் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர் நிரப்பி அநுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

கொம்பெனிகள், ஏஜென்ஸிகள் மாகாணக் கச்சேரிகள், டிஸ்திறிக் கச்சேரிகள் முதலியவைகளிலிருந்து பதிவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## 14,000 சத்தியாக்ரஹிகள் சிறை சென்றனர்

### ஐக்கிய மாகாணத்தில் நிகழ்ச்சி

அலஹபாத், ஜூன் 22

ஐக்கிய மாகாணத்தில் 14,000 சத்தியாக்ரஹிகள் சிறைசென்றிருப்பதாயும், எந்தச் சத்தியாக்கிரஹ இயக்கத்திலும் இவ்வளவு பேர் சிறைசென்றதில்லையென்றும் சத்தியாக்ரஹம் சம்பந்தமான நிருவாகி ஸ்ரீ சந்தபால் ஜௌஹாரி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

## புராதீனமான விஹாரை

### இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது

கொழும்பு, ஜூன் 29—

தம்மன்கடுவை டிஸ்திறிக்கில் காட்டின் மத்தியிலே மறைந்திருந்த மிகப் புராதீனமான ஒரு பௌத்தாலயம் புதைபொருளாராய்ச்சி இலாகாவின் முயற்சியால் இப்பொழுதுகண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆலயத்திற்கு மண்டலகிரி மாடிரிகிரியா விஹாரா என்று பெயர் சொல்லப்படுகிறது. இப்பொழுது சிதைந்து சின்னபின்னமாகக் கிடக்கும் குறித்த ஆலயம் சேன் படும் ஸ்தலத்தின் அருகே உள்ள காட்டை அழித்துப் பாதைகளை ஏற்படுத்தும் வேலையைப் பூமிப் புதைப்பொருளாராய்ச்சி இலாகாவைச் சேர்ந்த தொழிலாளர்கள் கவனித்து வருகிறார்களென்று தெரியவருகிறது.

## தொழிலாளர் தகராறு

### தீர்ப்பதற்குப் புதிய வழி

கொழும்பு ஜூன், 28—

தொழிலாளர் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்காக மேல் மாகாணத்தில் தொழிலாளர்களுக்காக ஒரு கூட்டு நிருவாகசபையை ஏற்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக இங்கு செய்தி எட்டுகிறது. இத்தமாதிரி ஒரு புதிய ஸ்தாபனத்தை ஏற்படுத்தவேண்டுமென்று முதலில் உதவி-லேபர்-கொண்ட்ரோலர் ஆலோசனை கூறியதாகவும் தெரியவருகிறது.

# பேர்லினிற் பற்பல வதந்திகள்

## இதுவரை உருப்படியான வெற்றிச்செய்தி ஒன்றுங் கிடைக்கவில்லை

ஸ்டாக்ஹோம், ஜூன் 28

ஜேர்மானியர் விடுக்கும் அறிக்கைகளில் பட்டும் படாமலும் விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. தங்கள் மீது குற்றம் இல்லாதது போன்ற நிலைமையில் அந்த அறிக்கைகளின் வாசகம் காணப்படுகிறது. இதுபற்றி இங்கு எல்லாரும் பற்பல விதமாகப் பேசிக் கொள்ளுகிறார்கள்.

இந்த நிலைமையில், ஜேர்மனியின் தலைநகரான பேர்லினில் ஒரே வதந்திமயமாகக் காணப்படுகிறது. இராணுவ அதிகாரிகள் உறுதி கூறியபடி நாஸிகளின் வெற்றியைத் தலைநகரம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இதுவரை அத்தகைய உருப்படியான ஒரு வெற்றிச் செய்தியும் அறிவிக்கப்படவில்லை. இருந்தாலும் சமரின் போக்குப்பற்றி வெளிநாட்டின் மூலம் கிடைத்த செய்திகளின் மூலம் பலத்த வதந்திகள் பேர்லினிற் பரவுகின்றன என்று பேர்லினிலுள்ள ஸ்வீடிஷ் நிருபர்கள் அறிவிக்கிறார்கள்.

ருஷிய விமானப் படையை, ஜேர்மன் விமானங்கள் தொடர்ந்து நிர்மூலமாக்கி வருகின்றன என்றும், ருமேனியப் பிரதேசத்தில் ருஷிய வீரர்கள் கடுமையாகச் சமர் செய்கிறார்கள் என்றும், ருஷியாவை எதிர்த்து ஜேர்மனி புரியும் சமர், ஏற்கனவே வகுத்துள்ள திட்டப்படி நடந்து வருவதாகவும் ஜேர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

## புதிய வரிகள் விதிக்கும் பிரச்னை

### அதிகாரிகளிடையே அபிப்பிராயபேதம்

கொழும்பு ஜூன் 29

அடுத்த சில வருட வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழுகிறதென்பதைப்பற்றி முன்பே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை எப்படிச் சரிக்கட்டலாம் என்பதைப்பற்றிய ஆலோசனைகளைக் கவனிக்கவும், அதை குறித்து மந்திரி சபையார் மறுபடியும் தேசாதிபதியைக் கண்டு பேசுவார்கள் என்றும் தெரியவருகிறது. புதிய வரிகள் விதிக்கும் ஆலோசனைகள் சம்பந்தமாக மந்திரிமார்களுக்கும், பொக்கிஷக்காரியதரிசிக்கும் ஏதோ இன்னும் அபிப்பிராயபேதம் நிலவிவருவதாகவும், இதுகுறித்து இன்னும் ஒரு முடிவு ஏற்பட்டதாகத் தெரியவில்லையெனவும் எண்ணப்படுகிறது.

## ஸ்ரீ கே. எம். முன்ஷி

### அறிக்கை விவரம்

பம்பாய் ஜூன் 28

காங்கிரஸிலிருந்து ராஜினாமாச் செய்துள்ள திரு. கே. எம். முன்ஷி விடுத்துள்ள அறிக்கையின் சாரம் இது:-

“எனது எதிர்காலத்திட்டம் எவ்வாறு நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று எனக்கே தெரியாது. எதிர்காலத் திட்டத்தை எந்த முறையில், எவரின் உதவி கொண்டு நடைமுறைக்குக் கொண்டுவருவேன் என்பதும் எனக்குத் தெரியாது. வகுப்புக் கலவரத்தைத் தூண்டிவிடும் ‘காலிகள்’ செயலைத் தடுத்து நிற்க ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடிக்க நான் முயன்று கொண்டிருக்கிறேன். சர்வதேச நிலைமை குழம்பி நிற்கும் இந்தக் காலத்தில் மாத்திரமாவது இந்தியாவைத் துண்டுபோட வேண்டுமென்ற பேச்சுக்கள், வகுப்புக் கலவரம் ஆகிய இவைகளின் அபாயத்தைத் தவிர்க்கச் சட்டபூர்வமான ஒருவழியைக் கண்டுபிடிக்க நான் முயற்சி செய்து வருகிறேன்.”

## இந்தியா-பர்மா ஒப்பந்தம்

### ஒப்பமிடப்பட்டது

ரங்கூன் ஜூன் 28

பர்மாவில் இந்தியர் குடியேற்றம் சம்பந்தமான பிரச்னை குறித்த சகல ஒப்பந்தம் இன்று பிற்பகல் 1½ மணிக்குப் பிரதிநிதிகளால் ஒப்பமிடப்பட்டது.

## சென்னையில் சத்தியாக்கிரகம்

### 12 பேர்களுக்குத் தண்டனை

சென்னை, ஜூன் 24—

இன்று சென்னையில் 12 பேர்கள் சத்தியாக்கிரஹம் செய்ததற்காக பாதுகாப்புச் சட்டப்படி கைதுசெய்யப்பட்டுச் சென்னைப் பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் ஸ்ரீமான் வி. என். ரகுநாதராவ் முன்பு ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களாவன:— ஸ்ரீமான்கள் (1) எ. ரா. அம்பலம் (2) சடையாண்டி கௌண்டர் (3) பி. வி. அழகிரிசாமி (4) கே. வி. பனசீரி ஆச்சாரி (இந்நால்வரும் மதுரை ஜில்லாவாசிகள்) (5) ஆர். அழகிரிசாமிநாயுடு (ராமநாதபுரம்) (6) ஸி. கே. முனிசாமி நாயுடு (வேலூர்) (7) பாப்பிள்ளா சின்னையா பாத்ருடு (8) திம்மையா முத்தியாலு பாத்ருடு (9) பைதிபட்டி பொத்தண்ணா பாத்ருடு (10) தாவா வீராசாமி (11) எ. கோடீஸ்வரராவ் (12) மேடார சிந்தையா (இவர்கள் 6 பேர்களும் ஆந்திர நாட்டைச் சேர்ந்தவர்கள்)

மாஜிஸ்டிரேட் எல்லோரையும் குற்றவாளிகளெனத் தீர்மானித்து அவர்களில் ஏற்கெனவே தண்டனை அடைந்தவர்களான ஸ்ரீமான்கள் திம்மையா முத்தியாலு பாத்ருடு, தாவாவீராசாமிமேடாரசிந்தையா இம்மூவர்களுக்கும்தனித்தனி10வாரம் கடுங்காவல்தண்டனையும் பைபட்டி பொத்தண்ண பாத்ருடு எ. கோடீஸ்வரராவ் இவ்விருவர்களுக்கும்தனித்தனிமூன்றுமாதம்கடுங்காவல்தண்டனையும் விதித்தார். பாக்கி ஏழுபேர்களுக்கும்தனித்தனிஇரண்டுமாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

எல்லோருக்கும் ஸி வகுப்பு கொடுக்கப்பட்டது.

# அரசாங்கக் காணி விநியோகத் திட்டம்

## விவசாயமந்திரிக்குக் காணிக்கொம்மிஷனரின் அறிக்கை

காணிபூமியில்லாத கிராமவாசிகளுக்குக் காணிகளை உதவி அவர்களை அங்கு குடியேறச் செய்து வரும் முயற்சி சம்பந்தமாகக் கொம்மிஷனர் மிஸ்டர் எல். விக்கிரமசிங்கா விவசாய மந்திரிக்கு ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார். அதில் மேற்படி முயற்சியின் அபிவிருத்தி மிகவும் மெதுவாகவோ அல்லது திருப்திகரமாகவோ இருக்கவில்லையென்று அவர் கூறுகிறார்.

காணி பூமியில்லாத கிராமவாசிகளுக்குக் காணிகளை வழங்கி அவைகளில் அவர்களைக் குடியேறச் செய்துவரும் வேலை கஷ்டமுடையதாகவும் திருப்திகரமாகவும் முன்னேற்றமடையவில்லையென்றும் கிடைக்கக்கூடிய அரசாங்கக் காணிகளை நம்பிக்கையான விவசாயிகளுக்கு உதவும் வேலை துரிதப்படுத்தப்பட வேண்டுமென்றும் மிஸ்டர் எ. ரத்னயகா அரசாங்கசபையிற் கொண்டுவந்த பிரேரணை சம்பந்தமாக மந்திரிசபை ஆலோசனை செய்துவருகிறது.

1935ம் ஆண்டு அக்டோபர்மீ காணி அபிவிருத்திச் சட்டம் நடைக்கு வந்ததிலிருந்து 1940ம் வருட முடிவுவரை விவசாயிகளுக்கு மொத்தம் 76,476 ஏக்கர் நிலமும் மத்தியவகுப்பு இலங்கையருக்கு மொத்தம் 28664 ஏக்கர் நிலமும் விட்டுக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

காணிகள் தேவைப்படும் பகுதிகளிற் காணிக்கச்சேரிகளை ஏற்படுத்திக் கூடியவரை தாமதமின்றி அரசாங்கக் காணிகளை உதவும்படி வருமான உத்தியோகஸ்தர்களுக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் உத்தரவுகளின் பிரகாரம் அவர்கள் கடமைகளைச் செய்கின்றார்களா என்பது கவனிக்கப்பட்டு வருவதாகவும் இதுசம்பந்தமாக வெளிவேலைகளும் எழுத்துவேலைகளும் அதிகமாக ஏற்பட்டிருப்பதாற் கச்சேரிகளில் மேலும் பல சிப்பந்திகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனரென்றும் காணிக் கொம்மிஷனர் கூறுகிறார்.

காணிகளை வழங்கும்வேலை துரிதமில்லாமலோ அல்லது திருப்திகரமில்லாமலோ இருக்கவில்லையென்று வற்புறுத்துவதோடு சதுப்பு நிலப்பகுதிகளிலுள்ள பல கிராமங்களைச் சேர்ந்த அரசாங்கக் காணிகள் முழுவதும் உதவப்பட்டு விட்டதாகவும் காணி தேவைப்படும் விஷயம் தெரிந்தபோதிலோ அல்லது அறிவிக்கப்பட்டபோதிலோ ஒதுக்கப்படாமலிருந்ததில்லையெனவும் மிஸ்டர் விக்கிரமசிங்கா தெரிவிக்கிறார்.

# 4200 ஏக்கர் காணி அபிவிருத்தி

## விவசாயநிர்வாகசபையின் முன் விரிவான திட்டம்

காணிக்கொம்மிஷனரின் தலைமையில் நியமிக்கப்பட்ட உத்தியோக சம்பந்தமான நிர்வாகசபை சிபார்சு செய்திருக்கும் பராக்கிரம சமுத்திரத் திட்டம்பற்றிச் சென்ற புதன்கிழமையன்று விவசாய நிருவாகசபைக் கூட்டத்தில் ஆலோசனைசெய்யப்பட்டது.

இரண்டு மடைவாய்களை அமைத்து அதன்மூலம் ஏறக்குறைய 4200 விஸ்தீரணமுள்ள தரிசுநிலங்களை நன்கு அபிவிருத்தி செய்வதற்குரிய விரிவான திட்டங்கள் விவசாய நிர்வாகசபையின் புதன்கிழமைக் கூட்டத்திற் சமர்ப்பிக்கப்பட்டன:

குறித்த 4200 ஏக்கர் நிலங்களும் இரண்டு மடைவாய்களின்மூலம் அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென்பதே உத்தியோக நிர்வாகசபையின் சிபார்சாகும். இதுவுமன்றி, ஏறக்குறைய 16,000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணிகளை அபிவிருத்தி செய்வதற்கான விரிவான ஒரு திட்டமும் பின்னர் சமர்ப்பிக்கப்படும்.

முதலிற் குறிப்பிட்ட 4200காணி அபிவிருத்தி சம்பந்தமாக நிலங்களை எவ்வாறு ஒதுக்கவேண்டுமென்பது பற்றியும் குறித்த நிர்வாகசபை சிபார்சு செய்திருக்கின்றது.

# நாயன்மார்கட்டுக் குளம்

யாழ்ப்பாணப் பட்டின சங்கத்தில் அடுத்த மாசம் நிகழவிருக்கும் மேற்படி சங்கக் கூட்டத்தில் 4-ம் வட்டாரப் பிரதிநிதி திரு. C. பொன்னம்பலமவர்கள் கீழ்க்காணும் விஷயமாக ஒரு பிரேரணையை எடுத்தாளுவரென அறியலானோம்.

இப் பட்டின சங்க 4-ம் வட்டாரத்திலுள்ள நாயன்மார்கட்டுக் குளமானது தொன்று தொட்டுப் புண்ணிய தீர்த்தமாகவுள்ளது. இங்கே சுவாமிக்குத் தீர்த்தங் கொடுப்பது மாத்திர மல்லாமல் காலந்தோறும் (அந்தியேஷ்டி முதலிய) சைவக் கிரியைகளுஞ் செய்யப்பட்டு வரலாயின; ஆனால் சில காலமாகச் சைவக் கோயிலுக்குட் பிரவேசிக்கத்தக்க அருகரல்லாச் சாதியினரும் முன்னோர் வழக்கத்திற்குங் கொள்கைக்கும் நேர் விரோதமாக இக் குளத்தில இறங்கிக் குளிக்க முழுகவும் அநாசாரமான செயல்களைச் செய்யவுந் தலைப்பட்டுக் கொண்டனர்.

இவைகளை உத்தேசித்துச் சென்ற 1939-ம் ஆண்டு அக்டோபர் மாசத்தில, அதிகார் [illegible] அவர்கள் தலைவராக இருக்க, மேற்படி குளத்தின் கட்டில் ஒரு பொதுக் கூட்டங் கூடப்பட்டது. அக் கூட்டத்தில தமிழ் அரசர்காலத்ததாகிய இக்குளத்தைப் பழையபடி சீராக முறையிருந்த இயல்பாகவே புண்ணிய தீர்த்தமாகப் பாவிக்க வேண்டுமென நிர்ணயிக்கப் பட்டது. அக்காலத்தில் மாகாணத் தலைவராயிருந்த மிஸ்டர் E. T. டைலரும் அக்கூட்டத்திற் சமூகஞ் செய்து மேற்படி கூட்டத்தாரின் நோக்கங்கட்கும் முயற்சிகட்கும் தாமும் பூரண ஆதரவு புரிவதாக வாக்களித்துள்ளார். ஆக வேண்டிய முயற்சிகளைச் செய்தற்காக அச்சமயத்தில் ஒரு நிர்வாக சபையும் நியமிக்கப்பட்டது. அக் குளத்தின் அணைமீது புதிதாக ஒரு தெருக் திறக்கப்பட்டது. குளக்கட்டி இன்ன பத்துறைகள் மாற்செய்தலை யெல்லாம் பட்டின சங்கத்தார் வெட்டிச் சீர்ப்படுத்திச் சில படிகளையுங் கட்டுவித்தனர். மேற்படி குளத்தின் மேற்குக் கட்டிலுள்ள பிள்ளையார் கோவிலுக்கும் இக் குளம் தீர்த்தக் குளமாக உபயோகிக்கப் படலாயிற்று. நல்லூர்க் கந்த சுவாமி கோவிலுக்கு வரும் அன்பர்களும் குளிக்க முழுக இக் குளத்தைப் பெரிதும் உபயோகித்து வரலாயினர். ஆனால் இற்றைக்கு இரண்டு வருடகாலத் தொடக்கமாக எல்லா வகுப்பினரும், பழைய பழக்க வழக்க ஒழுக்கங்கட்கு மாறாக இக் குளத்தை எல்லா வகையிலும் உபயோகிக்கத் தலைப்பட்டுக் கொண்டனர். சென்ற டிசம்பர் மாசத்தில் ஊர்க்கூடிக் கைச்சாத்திட்டு இந்த அடாத செயல்களைக் கணித்து ஒரு மனுப் பத்திரத்தை இப் பட்டின சங்கத் தலைவருக்குச் சமர்ப்பித்தனர்; சங்கத் தலைவர் அந்த டிசம்பர் மாதம் 21-ம் திகதி விசாரணை செய்துவிட்டு, சைவ ஆலயங்களுட் பிரவேசிக்கத் தகுதியாகிய மக்களை இக் குளத்தினையும் பழமைபோல் உபயோகிக்கலாமென்றும் ஏனையோர் உபயோகிக்கலாகாதென்றும் கருதத்தக்க ஒரு விளம்பரமும் எழுதிப் பறையடிப்பித்துப் பிரசித்தஞ் செய்வித்தனர். ஆனால் அந்தக் கட்டளையை இப்பொழுது எவரும் பொருட்படுத்தக்காணோம்; ஆனதால் மேற்படி சங்கத் தலைவரின் கட்டளையைக் கைக்கொள்ளச் செய்தற்காக இப்பொழுது ஒரு உப பிரமாணம் நிறைவேற்ற வேண்டியிருக்கின்றதென்பதாம்.

# வரவு செலவுத் திட்டத்தில் துண்டு

## தேசாதிபதியுடன் மந்திரிகளின் மகாநாடு

சென்ற வெள்ளிக்கிழமை மத்தியானம் 12 மணிக்கு இராணி மாளிகையில் தேசாதிபதியும் மந்திரிகளுமடங்கிய ஒரு மகாநாடு நடைபெற்றது. அதில் 1941—42-ம் வருட வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழுமென்று எதிர்பார்க்கப் படுந்தொகையைச் சரிப்படுத்துவதற்கான வழிவகைகள் பற்றி விவாதிக்கப்பட்டது.

அடுத்த நிதி வருட வரவு செலவினங்களை மந்திரிசபை சமீபத்தில் ஆராய்ந்து முடிவு கட்டியபோது, ஒரு கோடி ஐம்பதுலக்ஷ ரூபாய்க்கும் ஒருகோடி தொண்ணூறு லக்ஷம் ரூபாய்க்குமிடையில் துண்டுவிழும் என்று தெரிகிறது.

அதன்பின்னர் வரவு செலவுத் திட்டத்திற் சேர்க்கவேண்டிய மற்றுஞ் சில பிரதான செலவினங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அதன் விளைவாகச் செலவினங்கள் குறைக்கப்பட்டாலன்றித் துண்டுவிழும் என எதிர்பார்க்கப்படுந் தொகை ஏறக்குறைய இரண்டுகோடி ரூபாயாகிவிடும்.

இவ்வளவு பெரியதொகை துண்டுவிழுவதைச் சமாளிக்கவேண்டியது மந்திரிசபையின் இப்போதைய பிரச்னையாக இருக்கிறது.

சென்ற வெள்ளிக்கிழமை மாநாட்டில் உத்தேச வரவுக்கும் உத்தேசச் செலவுக்குமுள்ள வித்தியாசத்தை எந்த முறையிற் சரிப்படுத்தலாமென்பதுபற்றிப் பொதுவாகப் பேச்சு நடைபெற்றதென்று அறியப்படுகின்றது. ஏற்கெனவே மந்திரிசபையால் விவாதிக்கப்பட்டசில பரிகாரார்த்த ஆலோசனைகள் தேசாதிபதி முன்னிலையிற் சமர்ப்பிக்கப்பட்டன. நிதி நிலைமையை எப்படிச் சமாளிப்பதென்பது பற்றித் தேசாதிபதியின் அபிப்பிராயங்களை நிச்சயமாகத் தெரிந்துகொண்டு மந்திரிசபை வரவுத் திட்ட ஆலோசனைகளை முடிவாகத் தீர்மானிப்பதற்குத் திங்கட்கிழமை யன்று கூடும்.

# கொழும்பிற் பூமியதிர்ச்சி

சென்ற வியாழக்கிழமை மாலை 5-20 மணிக்குக் கொழும்பில் சிறு பூமியதிர்ச்சி ஏற்பட்டதாம். மேட்டுப் பிரதேசத்தில் காவலப்பிட்டியுட்பட பல இடங்களிற் சில விநாடி நேரம்வரை பூமி நடுங்கியதென்று காவலப்பிட்டியிலிருந்து ஒருவர் தெரிவிக்கிறார்.

# பணக் கஷ்டத்தாற் தாயின் தற்கொலை

## 2வயதுக் குழந்தையையும் அதே கிணற்றில் தள்ளினள்

மதுரை, யூன், 23

பணகஷ்டம் தாங்காமல் ஒரு ஸ்திரீ தன்னுடைய குழந்தையைக் கிணற்றில தள்ளித் தானும் அதே கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டாளென்ற செய்தி மதுரைக் கருகிலுள்ள அதலை என்னும் கிராமத்திலிருந்து கிடைத்திருக்கிறது. மகமாயி என்ற 35 வயதுள்ள மேற்படி ஸ்திரீ நேற்று முன்தினம் இரவு அக்கிராமத்திலுள்ள ஒரு கிணற்றில் 2 வயதுள்ள பஞ்சவர்ணமென்ற பெண் குழந்தையைத் தள்ளிவிட்டுத் தானும் அதே கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாளென்று கூறப்படுகிறது.

# பென்சோர வழக்குத் தீர்ப்புக்கு ஆக்ஷேபனை

## சார்ஜன் அப்பீல் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்

குருநாகலைப் பொலிஸைச்சேர்ந்த சார்ஜண்டான லயனல் பண்டார விக்ரமபெலோ மடஹபோலோ திசாவையின் 18 வயதுப்புத்திரி நந்தாவதி மடகபோலாவைக் கடத்திச் சென்றதற்குத் தம்மைக்குற்றவாளியாகக்கண்டு தமக்கு மூன்று வருடக் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பட்டதை ஆக்ஷேபித்து அப்பீல் செய்திருக்கிறார்.

விக்ரமபெலோ 9 தினங்கள்வரை விசாரிக்கப்பட்டு ஏழுஜூரர்களில் ஐவர் அவர் குற்றவாளியென்று தீர்ப்பளித்தமையால் நீதிபதிமிஸ்டர் விஜயவர்த்தன அவருக்கு மூன்றுவருடக் கடுங்காவற்றண்டனை விதித்தார். எதிர் சட்டப்பிரச்னைகள்மூலம் தமக்களிக்கப்பட்ட தீர்ப்பை ஆக்ஷேபித்த அப்பீல் வழக்குத் தொடர்ந்திருக்கிறார். வழக்கு விபரங்கள் சம்பந்தமான சிலபிரச்னைகளையொட்டியும் அப்பீல்செய்வதற்கு அநுமதிகோரி அவர்மனுச்செய்திருக்கிறார்.

இந்தஅப்பீல்மனு ஜூலைமாதம் 14-ந் திகதியன்று அப்பீல்கோட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

# பந்தோபஸ்துக் கைதிகளின் உண்ணாவிரதம்

கண்டி யூன் 24

நான்கு சமசமாஜப் பந்தோபஸ்துக் கைதிகளும் இன்றோடு இருதினங்களாக உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகின்றனர். அவர்கள் உப்புக்கலந்த ஜலத்தையே அருந்தி வருகின்றனரென்றும் அவர்கள் விழித்திருக்கும் நேரங்களிலும் படுக்கையிலேயே படுத்திருக்கின்றனரென்றும் இதுவரை அவர்கள் தேக நிலைமை திருப்திகரமாயிருப்பதாகவும் அறியப்படுகிறது.

தங்களை உடனே விடுதலை செய்யும்படியும் தங்களுக்குச்சில சௌகரியங்களை அளிக்கும்படியும் கோரி அவர்கள் உள்நாட்டு மந்திரிக்கு அனுப்பிய கடிதம் நேற்றையதினம் நடைபெற்ற உள்நாட்டு நிருவாக சபைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

கடிதத்திற் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்கள் சட்டக் காரியதரிசி அற்றோணி ஜெனரல் நீதிக்காரியதரிசி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆகியோரின் ஆலோசனைக் கனுப்பப்பட வேண்டுமென்று நிருவாக சபைக்கு மந்திரிதெரிவித்தார். மேற்படி கைதிகளை உடனே விடுதலை செய்ய வேண்டுமென்று அரசாங்கசபையில் தீர்மானித்த போதிலும் இவ்விஷயத்தில் தீர்ப்பளிக்க அதிகாரமுடையவர் தேசாதிபதியென்றும் நிருவாகசபை குறிப்பிட்டது.

நிருவாகசபை ஆதரிக்காத கோரிக்கைகள் பின்வருமாறு:—

1 தினமொன்றுக்கு ஒருமுறையாவது மேற்படி கைதிகள் பந்தோபஸ்தோடு வெளியே உலாவ அனுமதிக்கப் பட வேண்டும்.

2 அவர்களுடைய வழக்கறிஞர்கள் எந்த நேரத்திலும் அவர்களைப் பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும்.

3 பொது சனங்கள் அவர்களை எப்பொழுதும் காண அனுமதிக்கப்படுவதோடு ஒவ்வொரு கைதியையும் நான்கு பேர் தினமொன்றுக்குக் காண அனுமதிக்கப்பட வேண்டும்.

# விற்பனவுவிளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
இல, 13623.

மட்டுவில் வடக்கு கந்தர்-செல்லையா கைம்பெண் வள்ளிப்பிள்ளை வழக்காளி (மரணம்) 1. சரசாலை அப்பாக்குட்டி ஞானசேகரம்பிள்ளை
2 சரசாலை நாகநாதர் பொன்னையா
3 சரசாலை சிதம்பரநாதர் பொன்னப்பா.

எதிர்

1 சரசாலை சிவசம்பு நமசிவாயம் பெண் தெய்வநாயகி
2 சரசாலை சிவசம்பு நமசிவாயம்
3 சரசாலை பேரம்பலம் கந்தசாமி
4 சரசாலை பேரம்பலம் மகள் சாந்தநாயகி அல்லது கௌசலாம்பிகை.
5 துன்னாலை அருட்செல்வம் பெண் தேவரத்தினம்,
6 துன்னாலை அருட்செல்வம்
பதில் எதிராளி

இவ்வழக்குத் தீர்வையின்பேரால் எதிராளி வழக்காளிக்கு இறுக்கவேண்டிய ரூபா 1500 ஐயும் இதற்கு 1938ம் ஆ மார்கழி மீ 13உ தொடக்கமிறுக்கும் வரையும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீதவட்டியையும் செலவு ரூபா 320.93½ ஐயும் அறவிடுதற்காக பின் விவரிக்கப்படுமாதனங்களைக் கோட்டுக் கட்டளைப்படி 1941-ம் ஆ ஆடி மீ 21 உ திங்கட்கிழமை மு.ப. 9 மணி தொடக்கம் குறித்த காணிகட்குள் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

காணிகளின் விபரம்

(1) சரசாலையிறை இல்வாலை வயல் தெற். பர. 50. எல்லைகிழக்கும் வடக்கும் கதிர்காமர் வயிரமுத்துவினதும் சகோதரனினதுமாதனம், மேற்கு காலஞ்சென்ற விருசி பூதனின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய வாதனம், தெற்கு முருகேசு கந்தையாவுக்கும் சகோதரருக்குமுரிய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்ட வயற்காணிகளடங்கலும்,

2 சரசாலையிறை அடைக்கலக்காத்தான் வளவும் மறுபிரிவுகளும் கில. பர. 28½ இதிலடைபாகமாக கில. பர. 24. எல்லை கிழக்கு கதிரன் கந்தனுக்கும் பொன்னம்பலம்பெண் இலட்சுமிப்பிள்ளைக்குமுரியவாதனம், வடக்கு ஒழுங்கையும் வேலாயுதர் செல்லப்பாவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம், தெற்கு கா நன்னைகம்பெண் சின்னப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் பொன்னம்பலம்பெண் இலட்சுமிக்கும் முத்துமாரியம்மன் கோவிலுக்கும் கதிரன் செல்லனுக்கும் சகோதரிகட்குமுரியவாதனம்.

இ. வேலுப்பிள்ளை
கொம்மிஷனர்

1941ஆ ஆனிமீ 25உ
Mis 56—30.6.41

# வடக்கே ருஷிய வீரர் பின்வாங்கினர்

## மற்றிடங்களில் உக்கிரமான யுத்தம்

## ஜெர்மன் தளபதி கொல்லப்பட்டார்

மாஸ்கோ, யூன் 28

ஸோவியத் சைனியம் இன்னும் பலமான எதிர்ப்பை நடத்துவதற்காக வடக்குப் போர்முனையில்,பலம் பொருந்திய இடத்திற்குத் தொடர்ந்து பின்வாங்கிக்கொண்டு சமர்புரிகிறது என்று இன்றுவெளியான ஸோவியத் அறிக்கை கூறுகிறது. மேலும் அவ்வறிக்கை தெரிவிப்பதாவது:-

ஏற்கெனவே, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு ஸ்தலங்களுக்குப் பாரனோவிச், வில்னு, ஷாவுலே, முதலிய பகுதிகளில் ஸோவியத் துருப்புகள் தொடர்ந்து பின்வாங்கிக்கொண்டிருக்கின்றன. பின்வாங்கும்போதே அவைகள் பல இடங்களில் சத்துருவோடு கடுஞ் சமர் புரிந்தன. ஸோவியத் துருப்புகள் எல்லா முனைகளிலும் மிகக் கடுமையாகப் போராடுகின்றன.

மின்ஸ்க் பகுதியை நோக்கி முன்னேறிவந்த பெரிய ஜெர்மன் டாங்கிப்படையை ஸோவியத் துருப்புகள் எதிர்த்துப் புறமுதுகு காட்டி ஓடும்படி செய்துவிட்டன. அத்துடன் ஜெர்மன் இராணுவத் தலைமை ஸ்தாபனம் ஒன்றை ஸோவியத் துருப்புகள் நிர்மூலஞ் செய்துவிட்டன. ஒரு ஜெர்மன் தளபதி கொல்லப்பட்டார்.

ஏறக்குறைய 40 ஜெர்மன்டாங்கிகள் நிர்மூலமாக்கப்பட்டன. பெஸரேபியாமுனையில் ஸ்கூலனிக்கு அருகே பெருவாரியான முறையில் ரூமேனியாவைத் தாக்கச் செய்த ஜெர்மன் முயற்சியை ஸோவியத் துருப்புகள் நிலைகுலையச் செய்துவிட்டன.

வெள்ளிக்கிழமை இரவு ஸோவியத் துருப்புகள், கடற்படையின் உதவியுடன் டான்யூப் நதி முகத்துவாரத்திற் சமரிட்டுச் சாதகமான பல இடங்களைக்கைப்பற்றியதுடன், 11 பீரங்கிகளையும் 500 சத்துரு வீரர்களையும் கைப்பற்றின.

மின்ஸ்க் பகுதியை நோக்கி வந்து கொண்டிருக்கும் ஜெர்மன் இயந்திரப்படையை எதிர்த்துக் கடுமையாக நடத்துப் போரிடும் ஸோவியத் துருப்புகளுக்கு கர்னல், பீயோட்டர் குஜ்னிட்ஸோஜோவ் தலைமை வகித்து நடத்துகிறார். அவர், ஸோவியத் இளந் தளபதிகளுள் ஒருவர்.

நேற்று ஸோவியத் இராணுவத்தை முறியடிக்கும் செய்தியை அறிவிப்பதாக நாஜிகள் உறுதி கூறியிருந்தார்கள், உறுதி கூறிய அந்த நேரம் வந்ததும், வெற்றிச் செய்திக்குப் பதில் ஜெர்மன் செய்தி ஸ்தாபன அறிக்கை, ஜெர்மன் ரேடியோமூலம் வாசிக்கப்பட்டது. அதில் குறிப்பிட்டிருப்பதாவது: ஜெர்மன் துருப்புகள் ஸோவியத் அரணைத்தகர்த்துக்கொண்டு வெகுதூரம் சென்றுவிட்டன என்று இங்கு கிடைத்துள்ள தகவல்களின் மூலம் தெரியவருகிறது. இதனால் ஜெர்மன் துருப்புகள் நேற்றுமுன்தினம் மிகக் கடுமையாகப் போரிடவேண்டியேற்பட்டது. ஜெர்மன் துருப்புகள், எதிரிகளுக்குச் சிறந்த சேதத்தை உண்டாக்கின.

ஹங்கேரிய இராணுவத் தலைமை ஸ்தாபன அறிக்கையொன்று, 'ஹங்கேரிய ஆகாயப்படை, ஸோவியத் விமானங்களின் செயலுக்குப் பதிலுக்குப் பதில் செய்யும் பொருட்டு, நேற்றுக்காலை ஸோவியத் இராணுவ முக்கியத்துவ ஸ்தலங்களைத் தாக்கின' என்று கூறுவதாகப் புடாபெஸ்ட் ரேடியோ அறிவிக்கிறது.

லோவோவைச் சுற்றி மிகக் கடுமையான சண்டை நடைபெறுவதாக வியான்ஸ் ரேடியோ கூறுகிறது. ஊர்ஜிதம் செய்யாத அச்சுநாட்டுச் செய்தியொன்று லோவோவை நாஜித்துருப்புகள் கைப்பற்றிவிட்டதாகக் கூறியபோதிலும், இன்னும் அவ்விடம் ருஷியர் கையிலேயே இருப்பதாகத் தெரிகிறது. மேலும் அந்த வியான்ஸ் ரேடியோ அறிவிப்பதாவது:-

இப்போது நாஜிகளின் முழுக்கவனமும், லெனின் கிராட் மீதே பதிந்திருக்கிறது. இவ்விடம் மூன்று திசைகளிலுமிருந்து பயமுறுத்தப்படுகிறது. பால்டிக் தேசங்களிலிருந்து நாஜித்துருப்புகள் ஒருவழியாக இவ்விடத்தை நோக்கி வருகின்றன; ஜெர்மன்-பின்னிஷ் துருப்புகள் வேறுவழியாக லெனின் கிராட்டை நோக்கி வருகின்றன. இவ்விரண்டையுந் தவிர, ஆகாயத் தாக்குதல் வேறு. லெனின் கிராட்டைச் சுற்றிப் பாதுகாப்புக்காக நான்கு ருஷிய இராணுவ டிவிஷன்கள் சேர்ந்து நிற்கின்றன.

ஸ்வீடனின் கடற் பிரதேசத்துக்கு வெளியே, இனந்தெரியாத ஒரு கப்பல், ஆகாயவிமானம் ஒன்றால் தாக்கப்பட்டதென்று தெற்கு ஸ்வீடிஷ்நகரமான யஸ்டாடிலிருந்து கிடைத்த செய்தி கூறுகிறது. தாக்கப்பட்ட கப்பலும், தாக்கிய விமானமும் யாரைச் சேர்ந்தவை என்பது தெரியவில்லையாம்.

பின்லந்தின் கடற்கரை நகரமான டாம்மிசாரிமீது நேற்று இரண்டு ஸோவியத் விமானங்கள் எட்டு சுரங்கங்களை வீசின. இந்த நகரம் ஹாங்கோவுக்கு அருகே இருக்கிறது.

# 7000 தொன் ஏற்றுமதிக்குக் கப்பல் வசதி

## தேயிலைத் தோட்டங்களின் ஒத்துழைப்புத் தேவை

கொம்மிஷனரின் வேண்டுகோள்

ஜூலை மாதத்தின் முதல் இருவார காலத்தில் ஏறக்குறைய 7000 தொன் தேயிலை ஏற்றுமதி செய்வதற்குக் கப்பலில் இடவசதி கிடைப்பதற்கான ஏற்பாடுகளைத் தேயிலைக் கொம்மிஷனர் செய்திருக்கிறார்.

இதில் ஏறக்குறைய 4000தொன் ஜூலை மாதத்தின் முதல் வாரத்தில் ஒதுக்கப்பட வேண்டி வருமென்று சொல்லப் படுகிறது.

நிகழும் மாதத்தில் தேயிலை ஏற்றுமதிக்கு ஒதுக்கப்பட்ட கப்பல் இடவசதியைச் சம்பூரணமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு இன்னும் ஏறக்குறைய 1000 தொன் தேயிலை ஏராளமாக உதவப்பட்டாலன்றி இந்த இடவசதியைப் பயன்படுத்திக்கொள்வது சாத்தியமில்லையென்று தேயிலைக் கொம்மிஷனர் கூறுகின்றார்.

அடுத்துவரும் மாதங்களிற் கப்பல்களில் இடவசதி கிடைப்பது நிச்சயமில்லாதிருப்பதாற் குறித்த அளவு தேயிலை உதவாதிருக்கும் தோட்டங்கள் ஜூன் மாதக் கடைசியோடு பூரணமாக உதவி ஒத்துழைக்கும்படி கேட்கப்பட்டிருக்கின்றன.

வழக்கமாக உதவும் அளவுக்கு அதிகமான தேயிலை உதவத்தக்க தோட்டங்கள் அதிகமாக எவ்வளவு உதவ முடியுமோ அவ்வளவையும் உதவும்படி கேட்கப்பட்டிருக்கின்றன. உள்நாட்டு விற்பனைக்காக ஒதுக்கி வைத்திருக்குந் தேயிலையையும் அவசியம் சேர்த்தால் ஏற்றுமதி செய்வதற்கு உதவும்படியும் கேட்கப்பட்டிருக்கிறது.

# சிவனடிபாதத்திற்குத் தவழ்ந்துசெல்லும் யாத்திரீகர்

## முடவரின் நம்பிக்கை

மீரிகமம், யூன் 24

டோனிஸ் பெரேரா என்னும் யௌவன முடவர் ஒருவர் சிவனடிபாத மலைக்குத் தவழ்ந்துகொண்டே யாத்திரை செய்கிறாரென்றும் அவர் இப்பொழுது அம்பேபுசாவையைத் தாண்டி விட்டாரென்றுந் தெரியவருகின்றது.

வியாங்கொடையைச் சேர்ந்த கிராமமொன்றில் வசித்துவந்த டோனிஸ் பெரேரா அவரது யாத்திரையை ஆரம்பித்து ஏறக்குறைய 6 மாதங்களாகின்றன. தினம் ஒன்றுக்கு 2 மைல் தூரம் அவர் ஊர்ந்து செல்லுகிறார். மேற்படி யாத்திரையின்மூலம் அவரது ஊனம் குணமாகிவிடும் என்று அவர் நம்புகிறார்.

# திருச்சிரேடியே நிகழ்ச்சி

(மீ 396)

### செவ்வாய் ஜூ

முதல் ஒலி ப்பு

காலை 7-30 சிதாரம்பம் செய்திகள் 7-50 எம். உத வீணை 8-15 குரல்வளைகள் தட்டு)8-45 குன்னக்குடி வெங் ஐயர்(இசைத்தட்டு)9-00 ஒலிபர முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 நிகாகானம்(இசைத்தட்டு)1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 என். ஆர். வாசுதேவாச்சாரி பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 இனியமெட்டுகள் (இசைத்தட்டு) 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்தியகீதம் 5-15 எம். உதயவர்மராஜா வீணை 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6.05 என். ஆர். வாசுதேவாச்சாரி பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 இலக்கிய வாசகம் 7-15 நேயர் விருப்பம் (இசைத்தட்டு) 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-50 (மதராஸிலுள்ளபடி) ஸ்ரீ ஜயதேவர் சங்கீத உபன்யாசம் 8-30 கால அறிவிப்பு 9-00 சங்கமம் 9-15 இடைவேளை (இசைத்தட்டு) 9-20 ஆங்கிலத்தில் அஞ்சல் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10.00 ஒலிபரப்பு முடிவு.

### புதன் ஜூலை 2

முதல் ஒலிபரப்பு

காலை 7-30 சிதாரம்பம்(இசைத்தட்டு) 7-40 தமிழில் செய்திகள் 7-50 [illegible] (இசைத்தட்டு) 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 எச். ராமசந்திர சாஸ்திரி புல்லாங்குழல் 9.00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 வித்வத் கோஷ்டி (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 எச். ராமச்சந்திர சாஸ்திரி புல்லாங்குழல் 2-00 தமிழில் செய்திகள் 2-05 எச். ராமசந்திர சாஸ்திரி புல்லாங்குழல் 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்திய கீதம் 5-15 டி. ஏ. நாகஸ்வாமி பாகவதர் பாட்டு 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கே. எஸ். தனம் சகோதரிகள் பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 புதிய திட்டம் 7-15 தேசமங்கலம் சுப்ரமண்ய ஐயர் வீணை (இசைத்தட்டு) 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 கே. எஸ். தனம் சகோதரிகள் பாட்டு 8-30 எங்கள் தபால் பெட்டி 8 45 டி. ஏ. நாகஸ்வாமி பாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

### வியாழன் ஜூலை 3

முதலாவது ஒலிபரப்பு

காலை 7-30 சிதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 எஸ். பாலகிருஷ்ணன் பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 ஸ்ரீமதி எல். அம்முகுட்டி அம்மாள் பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 சிலோன் நேயர்கள் விருப்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி எல். அம்முகுட்டி அம்மாள்பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 ஸ்ரீமதி எம். எஸ். செல்லம்மாள் வீணை, பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்திய சங்கீதம் 5-15 என். ஜி. சீதாராமன் பாட்டு 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 என். ஜி. சீதாராமன் பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 செய்தி விளக்கம் 7-15 சிற்ப சீவன் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் ரேடியோக்கச்சேரி 7-50 எம். எம். தண்டபாணி தேசிகர் பாட்டு மைசூர் டி. குருராஜப்பா வயலின் வாளாடி சுப்ரமண்யபிள்ளை மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

# மலையாள வெள்ளத்திற்கு 150 பேர் பலி

கள்ளிக்கோட்டை, யூன் 26

மலையாள வெள்ளத்தாலும் புயற்கொடுமையாலும் இதுவரை 158 பேர் மரணமடைந்திருப்பதாக உத்தியோகமுறையில் வெளியான தகவல்கள் மூலம் தெரியவருகிறது. குறித்த 158 பேர்களில் 69 பேர் செளகாத்திலிருந்து முப்பத்தொன்பது மைல் தூரத்திலுள்ள தாலிப் பரம்பைச் சேர்ந்தவர்கள். 11 பேர் பொன்னானியைச் சேர்ந்தவர்கள்.

## டைவுநகை விற்பனவு விளம்பரம்

ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் டைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு ராம. அள. ராம. அளகப் பார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற் த்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகை விபர

9ம் ஆண்டு 11ம் மாசம்

| இ. | ரூ. | ச. | ஊர், பெயர், நகை விபரம். |
|---|---|---|---|
| 93 | 18 | 16 | வண்கிழக்கு க. முத்துராஜா இமி கல் புரோச் 1 |
| 12ம் மாசம் | | | |
| 6130 | 5 | 39 | சோனகதெரு அ. மீராசாகிப் சங்கிலி 1 |
| 6169 | 10 | 10 | கண்டிக்குளி மா. ராஜேந்திரம் இமி கல் 8 மோதிரம் 1 |
| 6214 | 14 | 40 | ஒட்டுமடம் பொ. சோமசுந்தரம் இமி கல் பழுது மளுக்கன் கல் பதக்கத்துடன் V அட்டியல் 1 |
| 6253 | 18 | 170 | வண்மேற்கு K. பழனிமுத்துப்பிள்ளை திருகில்லாத சங்கிலி அட்டியல் 1 |
| 6338 | 25 | 20 | அநுராசபுரம் ஆ. முருகேசு வெந்தயச்சங்கிலி ஒன்றும் இள பொன் காட்டுக்கடுக்கன் ஒன்றுக்கும் |
| 1940ஆ 1ம் மாசம் | | | |
| 6455 | 6 | 50 | கோப்பாய் ச. நாகலிங்கம் அச்சுக்காப்பு சோடி 1 |
| 6456 | 6 | 85 | கோப்பாய் ச. நாகலிங்கம் இரண்டுபட்டு குண்டுச்சங்கிலி 1 |
| 6492 | 9 | 140 | காங்கேசன்துறை சி. கணபதிப்பிள்ளை இமி கல் பென்டனுடன் குண்டுச்சங்கிலி 1ம் அச்சுக்காப்பு சோடி ஒன்றுக்கும் |
| 6518 | 11 | 275 | காங்கேசன்துறை சி. கணபதிப்பிள்ளை குண்டு இரண்டுடன் கோர்துக்கொடி ஒன்று |
| 6529 | 12 | 10 | பெரியகடைத்தெரு க. முத்துத்தம்பி இமி கல் தோடு சோடி 1 |
| 6598 | 18 | 11 | சோனகதெரு அ. மீராசாகிப் சிறு சந்திர முகப்பு ஒன்றும் இள பொன் கரிவு மணி ஒன்றுக்கும் |
| 6649 | 29 | 10 | வண்கிழக்கு C. W. துரைசிங்கம் இமிகல் தோடு சோடி 1 |
| 6697 | 28 | 15 | கோப்பாய் வயிரமுத்து செல்லப்பா கல்விழுந்த இமி கல் மோதிரம் 2 |
| 2ம் மாசம் | | | |
| 153 | 9 | 400 | சோனகதெரு வா. மீ. மு. அபூசாலிஸ் சவுடியுடன் சந்திரகாரா சங்கிலி ஒன்றும் இமி கல் பென்டனுடன் டைமனட்டியல் ஒன்றும் அச்சுக்காப்பு சோடி ஒன்றும் இமி கல் முகப்புடன் செளிமினருக் காப்பு சோடி ஒன்றுக்கும் |
| 255 | 18 | 10 | பெருமாள்கோவிலடி ப. செல்லையா குண்டு தடை உருப்படி 8 |
| 300 | 23 | 55 | காங்கேசன்துறை சி. கணபதிப்பிள்ளை விலாசம் போட்ட பெட்டி மோதிரம் ஒன்றும் இமி கல் புரோச் ஒன்றுக்கும் |
| 321 | 25 | 10 | திருநெல்வேலி பொ. நாகலிங்கம் இமி கல் தோடு சோடி 1 |
| 3ம் மாசம் | | | |
| 371 | 2 | 38 | தெல்லிப்பளை செ. குணரெத்தினம் ஒன்றுக்கு சந்துவெட்டிய அச்சு வளையல் காப்பு சோடி 1 |
| 401 | 5 | 18 | நாவாந்துறை ம. தம்பிராஜா இளாவர் மோதிரம் 1 |
| 415 | 5 | 38 | மானிப்பாய் அ. சுப்பிரமணியம் அச்சுக்காப்பு1 திருகுஇல்லை |
| 431 | 6 | 75 | புங்குடுதீவு கிழக்கு மா. முருகேசு பழுது திருகு சுரையில்லாத மூச்சுக்குத்தி அட்டியல் ஒன்றும் செம்புத் திருகுடன் இமி கல் காதோலை சோடி ஒன்றுக்கும் |
| 444 | 7 | 10 | தட்டாதெரு க. நடராஜா இமி கல்லை சுற்றி தங்கம் பிடித்த பென்டன் ஒன்று |
| 490 | 13 | 13 | கோணன் தோட்டம் கா. சண்முகம் கல்விழுந்த இமி கல் பெண்டன் ஒன்று |
| 494 | 13 | 7 50 | சோனகதெரு செ. அசனுலெப்பை அலுக்கொத்து 2 |
| 497 | 13 | 55 | வண்கிழக்கு சி. உலகநாதபிள்ளை அச்சுக்காப்பு சோடி 1 |
| 524 | 15 | 38 | மானிப்பாய் அ. சுப்பிரமணியம் அச்சுக்காப்பு 1 |
| 525 | 15 | 60 | சோனகதெரு M. S. மதார் மோதிரம் பதினொன்று |
| 532 | 16 | 22 | நல்லூர் கு. பக்கிரிசாமி இமி கல் காதோலை சோடி 1 |
| 4ம் மாசம் | | | |
| 747 | 4 | 15 | வண்கிழக்கு ராசம்மா கந்தசாமி அச்சு வளையல் காப்பு 1 |
| 754 | 5 | 155 | கோண்டாவில்மேற்கு செ.சின்னத்துரை இமிகல் புரோச் கோர்த்த கட்டைசேர்த்த வெந்தயச் சங்கிலி 1 |
| 781 | 7 | 12 | வண்கிழக்கு க. வல்லிபுரம் பழுது சிறு அச்சுவளையல்காப்பு1 |
| 800 | 8 | 155 | வண்கிழக்கு க. ஆறுமுகம் குண்டுச்சங்கிலி 1 |
| 838 | 10 | 150 | மானிப்பாய் அ. சுப்பிரமணியம் டைமன் காப்பு சோடி 1 |
| 855 | 12 | 75 | சோனகதெரு ப. சாகுல்கமீது சிறு வயிரச்சன்னம் இரண்டு கட்டிய தொங்கட்டான் குச்சி ஒன்றும் பச்சைக்கல் ஒன்றும் வயிரச்சன்னம் இரண்டு கட்டிய மோதிரம் ஒன்றுக்கு |
| 885 | 14 | 20 | கொக்குவில் வீ. க. துரைராஜசிங்கம் கரிவு தாலி ஒன்றும் இமி நீலக்கல் மோதிரம் ஒன்றுக்கும் |
| 891 | 15 | 100 | சோனகதெரு M. அப்துல்காதர் கல்வில்லாத செடிவேலை செய்த அமெரிக்கன் டாலர் 1 |
| 898 | 16 | 40 | கச்சேரியடி ஜே. வி. அரியநாயகம் சங்கிலி 1 |
| 912 | 17 | 12 | பண்டத்தரிப்பு க. மத்தியாஸ் இமி கல் தோடு சோடி 1 |
| 932 | 18 | 350 | காங்கேசன்துறை சி. கணபதிப்பிள்ளை முறிச்சிக்குத்திக் கொடி 1 |
| 966 | 22 | 15 | கைதடி ஆ. கோவிந்தர் சிமிக்கி வாளி சோடி ஒன்றும் இள பொன் பாசி மணிக்கோர்வை ஒன்றுக்கும் நூல்பவளம் |
| 967 | 22 | 10 | கைதடி ஆ. கோவிந்தர் சிமிக்கிவாளி சோடி ஒன்றுக்கு பாசி |
| 969 | 23 | 74 50 | சோனகதெரு M.M.S. அப்துல்காதர் இள பொன் பழுதுபாசி ஐந்துபட்டு மணிக்கோர்வை ஒன்றுக்கு நூல் |
| 1005 | 26 | 10 | கன்னாதிட்டி L. துரைராஜ் வயிரச்சன்னம் ஒன்று கட்டிய மூக்குமின்னி 1 |
| 1017 | 27 | 25 | கிராவியடி ச. பொ. வீரசிங்கம் இமி கல் கொண்டைப்பூ இரண்டுக்கு வெள்ளி |
| 1027 | 27 | 11 | பெரிய கடைத்தெரு நா. கணபதிப்பிள்ளை கல் விழுந்த இமி கல் பழுது தோடு சோடி 1 |

விற்பனவு நிகழும் விசுவு ஆனிமீ 29ந் திகதிக்குச் சரியான (12-7-41) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறகீங்கலாக மிருதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis. 55. 26 & 30.6.41)

யாழ்ப்பாணம்
ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,36700
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியம் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

YSA. 21-11-39—20-11-40
தில்.

மெலிந்து
சோர்வுற்று
பலமிழந்து
ஊக்கமற்று
இருக்கும்
சகலருக்கும்
ஓர் விசேஷச்
செய்தி

ஜீவாதார உலோக சத்துக்களடங்கிய
இந்தச்சிறந்த சாதனம் உங்களுக்குப்புதிய
ஆரோக்கியமும் ஊக்கமும் பலமும் அளிக்கும்

பழனி சி. எம். சாமி அசல் தங்கபஸ்பத்தை இன்று முதலே சாப்பிட்டு வாருங்கள். உஷ்ணம், மேகம், கடுப்பு, மூலம், நீரிழிவு, வாதம், தொய்வு, க்ஷயம், குன்மம் இவைபோன்ற ஏனைய எல்லா நோய்களும் நீங்கிவிடும். கண்டிப்பாகம் பலனடைவீர்கள். தேகம் பூராவும் புது ரத்தம் பாயும். பசி குசியுண்டாகும். நரம்புகள் வலுவடையும். கண்கள் பிரகாசமடையும். நீங்கள் வாலிப பலமும் தேக திடகாத்திரமும் அடைவீர்கள்.

24 நாள் பஸ்பம் விலை ரூபா 10

தலைமை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I
கிளை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y221 31-3-41—30.3.42

N. வைத்திலிங்கம்
& கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo.

Telephone No. 30.

(Y 20— 1-4-41—31-3-42) தி

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒரகலம் ரூபா 10-00 அரைக்கலம் ரூபா [illegible]
கால்கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூபா 1-00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி
காலம் குறித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜருடன் சேர்ந்து கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசுக்க எல்லைக்குள் தமிழ் ரூபா 5-00; இங்கிலீசும் தமிழும் 9-00
இலங்கை இந்தியா 8-00 இங்கிலீசும் தமிழும் 12-00
தொடுகரைப் பகுதி 9-00 இங்கிலீசும் தமிழும் 13-00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்

வெள்ளவத்தை
ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்
புடவைகள்

இப்போது யாழ்ப்பாணத்தில்ஒவ்வொருவீட்டிலும்
பேசப்படும் வார்த்தைகளாம்
ஒருமுறை பரீக்ஷித்தால்—
எப்போதும் விரும்பப்படுவது.
ஒவ்வொருவிதமான தினிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

- வேட்டிகள்
- சால்வைகள்
- சேலைகள்
- சாரங்கள்
- கம்பாய்கள்
- துவாய்கள்
- லோங்குளோத்ஸ்
- மல்லுகள்
- பெட்ஷீட்டுகள்
- டிரில்லுகள்
- குற்துணிகள்
- ரகுர்கள்
- 'ஷேட்'துணிகள்
- ஷிட்டுகள்
- பஞ்சணைஉறைகள்
- மேசைத்துணிகள்
- பப்ளின்கள்
- யன்னல்துணிகள்

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.
எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.
பெரியகடை, யாழ்ப்பாணம்.
வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ்,
(இந்தியாவில் ஸ்தாபிதமானது):
(அங்கத்தவரின் பொறுப்பு வரையறைக்கப்பட்டது.)

Mis 127. 11-10-40—

## முத்திரை உலகிற் பரபரப்பு

பெர்லின் யூன் 20

"சிவப்பு மொரிஷியஸ்" என்னும் ஓர் அபூர்வ முத்திரை கண்டுபிடிக்கப்பட்டது. அந்த இன்று பெர்லின் சவுண்டி கோட்டில் விற்பனை செய்யப்பட்டது. அது முத்திரை சேகரிப்பவர்களிடையேபரபரப்பை உண்டுபண்ணிற்று என்று உத்தியோக ஜெர்மன் ஏஜென்ஸி கூறுகிறது. உலகத்திலேயே இதுபோன்ற 11 முத்திரைகள்தான் உண்டு. அம்முத்திரை ஏறக்குறைய 2,250 பவுணுக்கு விற்கப்பட்டது.

## லண்டன் ஹோட்டலில் நிறத் துவேஷம்

### இந்தியப் பிரமுகருக்கு இடங்கொடுக்க மறுப்பு

கோம்மன்ஸ் சபையில்
எழுந்த கேள்வி

லண்டன், ஜுன் 25—

பிருத்தானிய கோம்மன்ஸ் சபையில் இன்று கேள்வி நேரத்திற் கண்ணியம் வாய்ந்த ஒருசிபல இந்தியருக்கு நிறத் துவேஷக்காரணத்தால் ஒரு ஹோட்டலில் இடங்கொடுக்க மறுக்கப்பட்டமைபற்றி ஸேர். ஸ்டான்லி ரீட்குறிப்பிட்டார். இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் நடக்காமலிருப்பதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களாவேண்டுமம் அவர் வினவினர்.

குறித்த சம்பவம் லைசென்ஸில்லாத ந.ந தனிப்பட்டவரின் ஹோட்டலில் நடைபெற்றதென்பதைத் தாமும் அறிந்திருப்பதாக உள்நாட்டு மந்திரி மிஸ்றர் ஹேர்பர்ட் மோரிஸன் கூறினர். மேலும் குறித்த விஷயத்தில் தலையிடத்தமக்கு அதிகாரமில்லையென்றும் ஆயின், குறித்த காரணத்திற்காகத் துவேஷம்பாராட்டுவேதாருவ அதைப்பலமாக ஆக்ஷேபிப்பதிற் சபையின் பூரண ஆதரவு தமக்குக் கிடைக்குமென்று தாம நிச்சயமாக நம்புவதாகவும் மிஸ்றர் ஹேர்பர்ட் மொறிஸன் தெரிவித்துக்கொண்டார்.

குறித்த சம்பவத்தைப்பற்றித் தமதுநண்பர்கள் பலர் ஆக்ஷேபனை தெரிவித்துக் கொண்டதாக விண்டர்ட்டன் பிரபுவும் கூறினர்.

## கொழும்பு மேயருக்குப் படி

### நகரசபை நிர்வாகசபைகளின் ஆலோசனை

சென்ற திங்கட்கிழமை கொழும்பு நகரசபையின் நிதிநிர்வாகசபையும் விசேஷ நிர்வாகசபையும் சேர்ந்து நடத்திய கூட்டத்திற் கொழும்பு மேயருக்குப் படிவழங்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டது. இதுவிஷயமாக விசேஷ நிருவாகசபை ஓர் அறிக்கையை ஏற்கனவே சமர்ப்பித்திருக்கிறது.

ரூ 5000 விருந்துபசார நிதியும் நகரசபைச் செலவில் ஒரு காருமோ அல்லது மாதம் ஒன்றுக்கு ரூ 1000 விருந்துபசாரப்படியோ தமக்கு அநுமதிக்கவேண்டுமென்று மேயர் ஆலோசனை கூறியிருப்பதாக அறியப்படுகிறது.

விவாதம் 1 மணிநேரம் வரை நடைபெற்ற போதிலும் மேற்படி இரு நிருவாகசபைகளும் ஒரு தீர்மானத்திற்கும் வரவில்லை.

## திருச்சி சபைக்கும் புதிய தலைவர்

### ஸ்ரீ வெங்கடாசலம் பிள்ளை தேர்ந்தெடுக்கப் பட்டார்

திருச்சி, யூன் 23

இன்று நடைபெற்ற திருச்சி ஜில்லா போர்ட்டுக் கூட்டத்தில் சென்னை ஜனப்பிரதிநிதி சபை அங்கத்தினர் ஸ்ரீமான் பி. வெங்கடாசலம் பிள்ளை புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்றுப்பிற்பகல் ஜில்லா போர்டு காங்கிரஸ் கட்சிக் கூட்டம் தீ. நா. கா. க. தலைவர் ஜனாப் உபயதுல்லா தலைமையில் நடந்தது. அதில் ஸ்ரீமான் வெங்கடாசலம் பிள்ளை போர்டின் தலைவர் பதவிக்குக் காங்கிரஸ் அபேக்ஷகராக நியமிக்கப்பட்டார்.

## மாணிக்கவாசகம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாயிற்று; அரசன் சேவகருக்கு, "அக்கள்வனை உடனே கொண்டுவா" என்று உரப்பினன். தாமதமில்லை உடன் இழுத்து வந்தனர். "உம்மைப் பேணியதற்கு நீர் மைக்குச் செய்த கைம்மாறோ இதுவோ நீர் அந்தணகுலவதரித்த பெம்மைக்கு, மந்திரங்கற்று சரிபரியாக்கி எமை ஏய்த்தீர். உம்மை இலகுவில் விடேன்." என அரசன் அழலெழக் கனைத்து; "வண்டா! என்ன கணக்கம். உன் இக்கள்ளனைப் பிடித்து கம்பணத்தை இம்மியும் விடாமல் பிடுங்குங்கள்" என்றுன் சேவகரை நோக்கி, அவர்களுக் வாய்த்தது வாசியென்று கரமுடைத்து நமக்கு; நமது சிவக்கொழுந்தைக் கட்டியடித்தனர். சரிமதிய வெய்யிலிற் சுடுமணலி னிறுத்தி நெற்றிக் கல்லேற்றி வருத்தினர். அண்ணலாரும் வேறு வழியின்றி;

"இரும்பு தரு மனத்தேனை யீர்த்தீர்த்
தென்னென்புருக்கி
கரும்புதரு சுவை யெனக்குக் காட்டினை
யுன் கழலிணைகள்
ஒருங்குதிரை உலவு சடை உடையானே
நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவ தன்றேயுன்
பேரருளே."
(திருவேசறவு .க)

"அன்றே யென்றன் ஆவியு முடலு
முடைமை யெல்லாமுங்
குன்றே யனையாயென்னையாட்கொண்ட
போதேகொண்டிலையோ இன்றோரிடை
யூறெனக் குண்டோவெண்டோண் முக்க
ணெம்மானே நன்றே செய்வாய் பிழை
செய்வாய் நானோ விதற்கு நாயகமே.

சோதியே! சுடரே! சூழொளி விளக்கே! சுரிகுழற்பணை முலை மடந்தை
பாதியே! பரனே! பால் கொள் வெண்
ணீற்றாய்! பங்கயத்தயனு மாலறியா
நீதியே! செல்வத்திருப் பெருந்துறை
யில் நிறைமலர்க் குருந்தமேவிய சீர்
ஆதியே! அடியேன் ஆதரித்தழைத்தால்
அதெந்துவே யென்றருளாயே.
(அருட்பத்து.க)

அடியவர் படும் துன்பம் அண்ணல் சகிப்பரோ! மதுரை அழியுமாறு பெருவைகையை ஏவினன் குருநாதன், வைகை நதியும் தாக்கிய நுரைசவாயிற் றடமதிலிடியத் தள்ளி ஆங்கெழின் மதுரை மூதூர் அழிப்பது போன்று செல்வ பாத்துள இடங்களெல்லாம் பரந்தது வைகை நன்னீர் ஈங்கினிச் செய்வதென்னென்றியாவருங் கவற்சிகொண்டார். அரசன் ஆணைப்படியே ஆற்றிற்கு அணைகட்டப் பெட்டியும், கூடைமண் வெட்டியும் கொண்டு ஊரெல்லாம் வேலைக்குச் சென்றது'

## நடுகல்லின் திருவிளையாடல்

1-ம் பக்கத் தொடர்ச்சி

நோக்கி, தமக்குக் குறித்தவிடம் யாது என வினவினர். அப்பொழுது அந்நடுகல் அவருக்கு இடம் கொடுத்தது. அவர் அது கொடுத்த இடத்திலிருந்து அடங்கிருக்கும் பொழுது, உடம்பை இனிய உயிர் விரும்புதல் போல விரும்பும் உரிமை மிகப் பழைய நண்பர் தம்மிடத்திலே வந்தால், தாம், பகர்க்கும் நிழலை ஒத்து உலகத்தைக் கடைவரையும் ஆளுகின்ற மறமையை நீளத்தால் முடியாமையினுல் அடங்கிருந்த உயிர் நீத்த இடத்து நடப்பட்ட கல்லாகிய விடத்தும் நிச்சயமாக இடங்கொடுப்பர்' என்னும் கருத்தமைந்த பின் வரும் செய்யுளைப் பாடினர்.

"பலர்க்கு நிழலாகி உலகமீக் கூறித்
தலைப்போ கன்மையிற் சிறவழி மடங்கி
நிலைபெறு நடுகல் ஆகியக் கண்ணும்
இடங்கொடுத்த அளிப்ப மன்ற உடம்
பொடு
இன்னுயிர் விருப்புங் கிழமைத்
தொன்னட்பு உடையார் தம்முழைச்
செலினே"

கல்லுக்கும் உயிர் உண்டென்று இக்கால சாஸ்திர அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் மணிவாசகர் தாம் எடுத்த பிறவிகளும் 'கல்லும்' ஒன்றெனக் கூறி கல்லுக்கும் உயிருண்டென்பதை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே புலப்படுத்தியிருக்கிறார்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்
பாகிப்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்
களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவரசங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்".

—திருவாசகம்

சாஸ்திர ஆராய்ச்சியினுல் கல்லுக்கு உணர்ச்சியும் நிலைப்பெயர்வும் உண்டு என்று கூறுங்காலமும் வந்தால் இப்புறநானூற்றுச் செய்தி அற்புதமாக அமையாது உண்மையாக மாறிவிடுமல்லவா?

—வரும்

வெளிவந்துவிட்டது!
புதிய வெளியீடுகள்
சிவிக்ஸ் (Civics) எனப்படும்
குடி இயல் நூல்

6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50
7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50

யாழ்ப்பாணம்
சைவபரிபாலன சபைப்
பிரசுரமாக அச்சிட்டு வெளிவந்துவிட்டது

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

## இராணுவசேவைப் பயிற்சிக்கு 104 பேர்

### மூன்றாவது கோஷ்டியிற் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்

ஜேயல் இராணுவசேவைப்பயிற்சிப் பிரிவைச் சேர்ந்த பயிற்சிப் பாடசாலையில் 104 பேரடங்கிய 3வது கோஷ்டி பயிற்சி பெறுவதற்காகச் சேர்ந்திருக்கின்றது. அதிகாரிகள் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே நான்குபேர் சேர்ந்திருக்கின்றனர்.

தி மலாயன்
டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள் சிமேந்து வகைகள்
விற்பனவு செய்வோர்

பெரியகடை, யாழ்ப்பாணம்
"புறேப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y. 19 4-3-41—3-3-42"

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 30th June, 1941.